Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு
THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 22 வெள்ளிக்கிழமை (07.09.2012) பக்கங்கள் 20 ஓசை – 341

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

குற்றம் குறைந்தால் பொலிஸூம் குறையும் 03



பிரசாரக் களத்தில் 06



விரைவில் மீள்வார் 08



முகப் பொலிவிற்கு... 11



தலையில் 2100 ஊசிகள்... 14



# இலங்கையர் மீதான அச்சுறுத்தலை கண்டிக்கிறது கத்தோலிக்க திருச்சபை

(கொழும்பு)

இலங்கையர்கள் மீது தமிழகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் காட்டுமிராண்டித் தனமான அச்சுறுத்தல்களை இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை மிக வன்மையாகக் கண்டித்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த பக்தர்கள் தமிழகத்தில் பல்வேறு அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களுக்கு உள்ளாவது குறித்து இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. இந்த நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என கொழும்புப் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தமிழக கத்தோலிக்கத் திருச்சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் இலங்கையர்களுக்கு ஏறபட்டு வரும் அச்சுறுத்தல்களுக்கு முடிவு காணும் வரை கத்தோலிக்கர்கள் தமிழகத்திற்குச் செல்லவேண்டாம் எனவும் அவர கேட்டுக்கொண்டுள்ளார். இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களை சிறந்த முறையில் வரவேற்று இலங்கை மக்கள் அனுசரித்து வருகின்றனர். ஆனால் தமிழகத்தில் உள்ள சிறிய தரப்பினர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது மிகவும் அநீதியானது எனவும் பேராயர் குறிப்பிட்டுள்ளார். பிரச்சினைகள் இருந்தால் அதனை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துகொள்ள வேண்டும். அதனை விடுத்து, அப்பாவிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவது ஏற்றுக் கொள்ள முடியாதது எனவும் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

## புறக்கோட்டையில் கடையடைப்பு

(கொழும்பு)

புறக்கோட்டை மற்றும் கோட்டை உள்ளிட்ட கொழும்பில் உள்ள பல வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கடையடைப்பு போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். தமிழகத்தில் வைத்து இலங்கையர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் இந்தக கடை அடைப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளனர். இந்த நிலையில் இந்திய உயர்ஸ்தானிகரத்தை நோக்கி, பேரணி ஒன்றையும் நடத்த அவர்கள் தீர்மானித்திருப்பதாக, பழைய சோனகத்தெரு மொத்த விற்பனையாளர் சங்கத்தின் தலைவர் கே.பழனியாண்டி தெரிவித்துள்ளார்.

## முற்றவெளியில் புதிய பூங்கா

### விரைவில் பொதுமக்கள் பாவனைக்கு

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் யாழ்.கோட்டைப் பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் புதிய பூங்காவின் நிர்மாணப் பணிகள் 2012 நவம்பர் மாதத்துடன் நிறைவடையும் என இந்த அதிகாரசபையின் தலைவர் நிமல் பெரேரா தெரிவித்தார். யாழ். மாநகர அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் காலை 10.00 மணிக்கு யாழ்.அரசாங்க அதிபர் தலைமையில் அவரது மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே அவர் இதனைத்

19 ஆம் பக்கம் பார்க்க

## பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு விரைவில் நட்டஈடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்கும் வகையில் பதிவுசெய்யப்பட்ட வர்த்தகர்களின் விபரம் கிளிநொச்சி கைத்தொழில் வணிக வேளான் ஒன்றியத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இவ் இழப்பீட்டுத் தொகையைப் பெறுவதற்குப் பதிவுசெய்த வர்த்தகர்களின் இறுதிப் பெயர் விபரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இவ் வர்த்தகர்களுக்கு காலக் கிரமத்தில் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் ஒன்றியத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு 1080 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில் 718 பேர் மட்டுமே முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் இவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் எனவும் ஒன்றியத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (28)


## தொழில்நுட்ப பகிர்வு தென்னாபிரிக்காவுடன் கூட்டு

(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான நிறுவனங்களின் கைத்தொழிற் துறைகளை தென்னாபிரிக்க அரசுடன் இணைந்து மேம்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது. கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான நிறுவனங்களின் செயற்றிட்டங்களை மகிந்த சிந்தனைக்கு அமைவாக மென்மேலும் மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அதன்பிரகாரம் கைத்தொழில், சிறுதொழில், சிறுகைத் தொழில்துறைகளுடன் கைத்தொழில் பேட்டைகளை அபிவிருத்தி செய்வது, பனை, கித்துள் மற்றும் மீன்வலை சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்துவது தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.



19 ஆம் பக்கம் பார்க்க

## கிரிக்கெட் வீரர்கள் நாளை யாழ்ப்பாணத்தில்

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களான மலிங்க, மத்தியூஸ், குலசேகர, சண்டிமல் ஆகியோர் நாளைய தினம் யாழ்ப பாணத்திற்கு வருகை தரவுள்ளனர். முரளி வெற்றிக் கிண்ணருவென்ரி - 20 கிரிக்கெட் தொடர் நாளை முதல் நான்கு மைதானங்களில் நடைபெறவுள்ளது. இப் போட்டித் தொடர் ஒட்டுசுட்டான் ம.வி., மாங்குளம் ம.வி., கிளிநொச்சி மத்திய கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மைதானங்களில் நடைபெறவுள்ளது. யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நர்ளைய ஆரம்ப நிகழ்வில் இலங்கை அணி வீரர்களான லசித் மலிங்க, மத்தியூஸ், குலசேகர, சண்டிமல் ஆகிய வீரர்களும், ஒட்டுசுட்டான் ம:வி.க்கு குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## கிழக்கில் தேர்தல் ஜுரம் ஆணையாளர் சூறாவளி விஜயம்



(மட்டக்களப்பு)

கிழக்கில் தொடர்ச்சியான தேரதல் வன்முறைகள் இடம்பெற்று வருவதால் அங்கு ஒருவகையான பதற்றநிலை ஏற்பட்டுள்ளதாகவும், அதிகரித்துள்ளதாகவும் நாளைய தேர்தல் தினத்தில் மேலும் வன்முறைகள் வெடிக்கலாம் என்று 'கபே' அமைப்பு முன் எச்சரிக்கை செய்துள்ளது.

இதனால் குறித்த பிரதேசத்தின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கபே கோரிக்கை விடுத்துள்ளது.


அதேவேளை தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய நேற்றுக் காலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல் அலுவலகத்திற்கு திடீர் விஜயம் மேற்கொண்டார். இதன்போது, மட்டக்களப்பிலுள்ள உதவித் தேர்தல் ஆணையாளரை சந்தித்த ஆணையாளர் தேசப்பிரிய, தேர்தல் நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடினார். இதனையடுத்து தேர்தல்

19 ஆம் பக்கம் பார்க்க

## வேட்பாளர் வீடு மீது கைக்குண்டு வீச்சு

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி முதன்மை வேட்பாளர் எம்.ஏ.எம். மஹ்றூபின் வீட்டிற்கு இனந்தெரியாதோரால் கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது. இச்சம்பவம் கிண்ணியாவில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். வீசப்பட்ட இக்கைக்குண்டு வீட்டிற்கு முன்னால் உள்ள மரமொன்றில் பட்டு கிழே விழுந்து வெடித்துள்ளது. இதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மண்டைதீவுக்கு விடிவு காலம் மின் இணைப்பு சேவைகள் துரிதம்



(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதிக்கான மின் இணைப்பு வேலைகள் இலங்கை மின்சார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தீவுப் பகுதி ஊர்காவற்றுறைப் பகுதியில் இருந்து அல்லைப்பிட்டி வரையும் செய்யப்படும் மின் விநியோக மார்க்கத்தில் இருந்து மண்டைதீவுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவருகின்றது.

இதற்கு அமைய அல்லைப்பிட்டியில் இருந்து மண்டைதீவுச் சந்தியூடாக மின் இணைப்பு வேலைகளின் நிமித்தம் மின் கம்பிகள் நாட்டப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகள் பூர்த்தியடைந்ததும் ஊர்காவற்றுறையில் இருந்து மின் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன் பின்னர் இந்த மின் விநியோக வலையமைப்பு யாழ். விநியோக மார்க்கத்துடன் இணைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மேலும், தீவுப்பகுதிக்கான தரைவழித் தொலைபேசி இணைப்பு வேலைகளும் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மேலும் தெரிவித்தன. (பா)

# திருக்குறள் வினா விடைப் போட்டி யூனியன் கல்லூரி முதலிடம்

(நெல்லியடி)

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியின் நிறுவுனர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையிலான திருக்குறள் வினா விடைப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்றுக் கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில், முதலாமிடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், 2ஆம் இடத்தை வடஇந்து மகளிர் கல்லூரியும், 3ஆம் இடத்தை அக்கராயன் புனித தெரேசா மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டியில் நடுவர்களாக யாழ்.பல்கலைக்கழக வணிக பீட பேராசிரியர் வேல்நம்பி, யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை உதவி விரிவுரையாளர் செல்வமனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்போட்டியில் யாழ்.மாவட் டத்தில் நான்கு வலயங்களைச் சேர்ந்த 16 பாடசாலைகள் கலந்து கொண்டதுடன் முதல் சுற்று, இரண்டாம் சுற்று என இரு நாட்கள் இப்போட்டி நடைபெற்றது. (17)

# திண்மக் கழிவு அகற்றலில் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்

திண்மக்கழிவு அகற்றலில் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என வலி.கிழக்குப் பிரதேசசபை எதிர்க்கட்சி உறுப்பினர் நா.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகப் பிரதேசத்தில் கடந்த புதன் கிழமை திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டன. கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக அகற்றப்படாது குவிந்து கிடந்த திண்மக் கழிவுகள் தொடர்பாக உரும்பிராய் சந்தி வர்த்தகர்கள் சிலர் வலி. கிழக்கு பிரதேசசபை உறுப்பினரான நா.இராசநாயகத்திடம் விடுத்த கோரிக்கையையடுத்து அவர் வலி.கிழக்கு பிரதேச. சபை தவிசாளரிடம் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கையின் பயனாக சபை உறுப்பினரின் மேற்பார்வையில் உரும்பிராய்ச் சந்தி உணவு நிலையங்களிலும், சிவகுலவீதி, சிவன் வீதி மற்றும் பழைய மருந்தக வீதி போன்ற பகுதிகளில் குவிந்து கிடந்த திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டன.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்திண்மக்கழிவுகள் தொடர்பில் பொதுமக்களுக்குப் போதிய விழிப்புணர்வு இல்லாததாலும் பிரதேசசபையிடம் போதிய வாகனம் மற்றும் ஊழியர் பற்றாக்குறை காணப்படுவதாலும் இவற்றை அகற்றுவதில் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

இப்பணிகளில் பொதுமக்கள் தங்கள் பொறுப்புக்களையும், கடமைகளையும உணராது உக்கக்கூடிய, எரியக்கூடிய குப்பைகளையும் பைகளில் கட்டி வீதியோரங்களில் குவித்து விடுவதால் பிரதேசமே அசுத்தமடைகிறது. இதனைத் தவிர்க்கவும், திண்மக்கழிவகற்றலை இலகுவாக மேற்கொள்ளவும் பொதுமக்கள் உக்கிப் போகக் கூடிய குப்பைகளைத் தங்கள் வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு குழி தோண்டிப் புதைத்துக்கொண்டு மிகுதி அழிவடையாக் குப்பைகளை மட்டும் பொது இடத்தில் வைப்பதன் மூலம் நாம் எமது நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

அத்துடன் மதுப்பிரியர்கள் தாங்கள் பாவித்த மதுப்போத்தல்களை வீதியோரங்களில் வீசி விடுவதன் மூலம் பிரதேசமும், மக்களும் பாதிப்படைகின்றனர். இதனை இல்லாதொழிக்க மதுபானச்சாலை உரிமையாளர்களும் தங்கள் பங்களிப்பைச் செய்ய முடியும். அதாவது மதுப்பிரியர்களுக்கு மதுபானத்தை வழங்கும்போது பழைய போத்தலை மீளப்பெற்று (பழைய போத்தலை மீள வழங்குபவர்களுக்கு மட்டுமே மதுபானத்தை வழங்குதல்) தங்கள் வளவில் சேமிப்பதன் மூலம் அவற்றைப் பிரதேசசபை இலகுவாக அகற்றிப் பிரதேசத்தைப் பராமரிக்க முடியும். இவ்வாறு மதுபானசாலை உரிமையாளர் களும் தங்கள் வியாபாரம் பாதிப்படையாமல் எமது பிரதேசத்திற்கு பெறுமதிமிக்க பங்காற்றியவர்கள் ஆவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (22)



# முப்பரிமாண நூலகக் கண்காட்சி தயாராகிறது பிரதேசசபை

(தீவகம்)

உள்ளூராட்சி மறுசீரமைப்பு செயற்திட்டத்தின் கீழ் வேலணை பிரதேசசபை உப அலுவலக பொதுசன நூலகத்தின் முப்பரிமாண நூலகக் கண்காட்சியும், அறிமுக வைபவமும், கையெழுத்துச் சஞ்சிகைக்கான பரிசளிப்பு விழாவும் மற்றும் கலை நிகழ்வுகளும் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வேலணைப் பிரதேச சபை தேவா கலையரங்கில் வேலணை பிரதேசசபை தவிசாளரும், ஈ.பி.டி.பி.யின் வேலணை பிரதேச அமைப்பாளருமான சி. சிவராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாகப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பா.ஜெயகரன், யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன், வேலணைப் பிரதேச செயலர் திருமதி சதீஷன் மஞ்சுளாதேவி, யாழ். பல்கலைக்கழக பிரதம நூலகர் செல்வி ஸ்ரீ அருளானந்தம், யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தேசிக்காய் விலை அதிகரிப்பு

தென்மராட்சி, கொடிகாமம் பொதுச் சந்தையில் தற்போது தேசிக்காய்க்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ஒரு கிலோ தேசிக்காய் 300 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை, இவ்விலையை விட இன்னும் விலை அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (150)

# காரைநகரில் கூடுகிறது ஒருங்கிணைப்புக்குழு

(காரைநகர்)

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு காரைநகர் ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும், ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தலைமையில் இடம்பெறவுள்ளது. (135)

# நுளம்பு வலை விநியோகம்

வட.வரணி ஜே/339 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு கடந்த சனிக்கிழமை விநாயகர் சனசமூக நிலையத்தில் வைத்து நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. ஏற்கனவே இப்பிரிவில்' இரண்டு தடவைகள் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. மிகுதியாக வலைகள் பெற்றுக்கொள்ளாத மக்க ளுக்கே மேற்படி நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (150)

## இன்று கிருஷ்ண ஜெயந்தி

கடமையை நீ செய்ய வேண்டும்,
கருதிநீ உழைக்க வேண்டும்,
காலம் உன்னைப் போற்ற வேண்டும்,
கண்ணன் வழி நடக்க வேண்டும்.

மடமைதன்னை மாற்ற வேண்டும்
மண்ணில் நல்ல வண்ணம் வேண்டும்,
மாபெரும் புகழ் வரினும்
மாயக்கண்ணன் அருளும் வேண்டும்.

திடமையான வாழ்வு வேண்டும்,
தியாகமே உருவாக வேண்டும்,
தெருவினில் அவதானம் வேண்டும்,
தேரில் கண்ணன் பேறு வேண்டும்.

கொடுமை தானாய் விலக வேண்டும்,
குசேலர் வாழ்வு தெரிய வேண்டும்,
கோடி, மாடி, நாடு, தோறும்
கிருஷ்ண ஜெயந்தி காண வேண்டும்.

- கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

நல்ல சுற்றாடலில் உள்ள ஒரு பரப்புக் காணியிலுள்ள சகல வசதிகளும் கொண்ட ஒரு வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.சீவறட்ணம், றியிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (R/154)



## பனை அபிவிருத்திச் சபை

### வாகனத்திருத்தம் மேற்கொள்வதற்கான கூறுவிலை கோரல்

எமது சபையின் பாவனையில் இருந்து வரும் பிக்கப் வாகனத்தை திருத்தம் செய்வதற்குத் தகுதியான வாகனத் திருத்துனர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

குறித்த வாகனத்தை "தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிட்டு மேலதிக தகவல்களைப் பெற்று அதற்கான கூறுவிலையை எதிர்வரும் 21.09.2012 இற்கு முன்னர் தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பசுபதி சீவரத்தினம்,
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

(C/1851)



22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றிட

## சுவர்ணா ஜுவலர்ஸ்



கனகபுரம் வீதி
கிளிநொச்சி.
தொ.பே : 0214925687
077326838
E.mail:vsthavam@gmail.com



(C/1927)

# யாழில் குற்றச்செயல் குறைவடைந்தால் பொலிஸாரின் எண்ணிக்கை குறைக்கப்படும்



(கிரு-சிகரம்)

யாழ்மாவட்டத்தில் எதிர்வரும் காலங்களில் குற்றச்செயல்கள் குறைவடையும் பட்சத்தில் பொலிஸாரின் எண்ணிக்கையும் குறைக்கப்படும் என யாழ் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

இலங்கையில் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 146 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு யாழ்.பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து உரையாற்றுகையில்,

தற்போது வடபகுதியில், இராணுவத்தினரின் செயற்பாடுகள் குறைக்கப்பட்டு பொலிஸாரின் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 30வருட காலமாக இராணுவத்தினருடைய செயற்பாடுகள் மட்டுமே வடக்கு கிழக்கில் காணப்பட்டது இதனால் பொலிஸாரின் செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்பட்டது எனினும் தற்போது யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதால் இராணுவத்தினரின் செயற்பாடுகள் குறைக்கப்பட்டு, பொலிஸாரின் செயற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுச் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

அத்துடன், யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 3,100 பொலிஸார்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் இவ்வாண்டு 2500 பேராகக் குறைக்கப்பட்டுள்ளனர். இனிவரும் காலத்தில் குற்றச்செயல்கள் குறைவடையுமிடத்து பொலிஸாரின் எண்ணிக்கையும் குறைக்கப்படும் எனஅவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கணிதபாட செயற்திட்டம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாண கல்வி வலயத்தின் கீழ் இயங்கி வரும் பாடசாலைகளில், தரம் 06,09,10 மாணவர்களுக்காக, யாழ் வலய கணி தப் பிரிவினால் கடந்த இரண் டாம் தவணை முதல் ஆரம்பித்து நடாத்தப்பட்டு வரும் கணித பாடத்திற்கான விசேட செயற் றிட்டத்திற்கான, பயிற்சிப் பரீட்சைகள் மூன்றாம் தவணையின் ஆரம்பத்திலிருந்து நடாத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கணித பாடத்திற்கான விசேட செயற்திட்டத்தின் கீழ் மேற்படி வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களின் அடிப்படைக் கணித அறிவு மற்றும் திறன்களை மேலும் விருத்தி செய்து கொள்ளும் வகையில் நடாத்தப்பட்டு வரும் இவ் வகுப்புக்களில் பங்குபற்றி வரும் மாணவர்களின் அடைவு மட்டங்களை சோதித்தறியும் வகையில் இவர்களுகான பரீட்சை வினாத்தாள்கள் விசேட ஆசிரியர் குழுவினால் ஏற்க னவே தயாரிக்கப்பட்டுளளன.

(03)

# ஆசிரியையின் கைப்பை சாதுரியமாகத் திருட்டு

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேசத்தில் பாடசாலை விட்டு சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஆசிரியையின் கைபையை மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள களவாடிச் சென்றுள்ளனர். நேற்றுமுன்தினம் பிற்பகல் வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆசிரியர் தனது கைத்தொலைபேசி, பணம், உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை தனது கைபையில் வைத்து சைக்கிளின் முன் கூடையில் வைத்துக்கொண்டு சென்ற வேளையே அப்பகுதியூடாக மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் சாதுரியமாக அதை திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அடையாள அட்டைகள் நேரடி விநியோகம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பங்கள் செய்தவர்களுக்கு அவர்களது முகவரிக்கு நேரடியாக அடையாள அட்டைகள் ஆட்பதிவு திணைக்களத்தினால் அனுப்பப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பப்பம் செய்தவர்களின் தேசிய அடையாள அட்டைகள் அந்தந்த பிரதேச செயலர்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு தரம்பிரிக்கப்பட்டு உரிய விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது.

இந்த நடைமுறையின் படி தற்போது அடையாள அட்டை விண்ணப்பத்துடன் உரியவரின் முகவரியுடன் முத்திரை ஒட் டப்பட்ட கடித உறையும் அனுப்பப்படுவதாகவும் அதன் மூலம் இவர்களுக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்படுவதாகவும் பிரதேச செயலக உத்தியோகத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (104)

# வீதிப்புனரமைப்பால் பாதைகள் மாற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கல்லூரி வீதி முதல் தம்பசிட்டி வீதிவரையான பகுதிக்கு காபெற் இடப்பட்டு புனரமைக்கப்படவுள்ளது. இவ்வீதி கடந்த 20 வருடத்திற்கு மேலாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக மோசமாக சேதமடைந்துள்ளது.

இதனை அடுத்து தற்போது வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இவ்வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக நகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேலும் பருத்தித்துறை நகர கடைகள் அகலிப்பு காரணமாக உடைக்கப்பட்டு அவ்வீதி வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதனால் 750, 751 ஆகிய பேருந்து சேவைகள் பருத்தித்துறையிலிருந்து ஆரம்பித்து கல்லூரி வீதி வழியாக யாழ்ப்பாணம் செல்லவுள்ளன.

பருத்தித்துறை பிரதான வீதி திருத்தத்திற்கா ஓராங்கட்டை சந்தியிலிருந்து இ.போ.ச.சாலை வரை மூடப்படவுள்ளது என ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினா தெரிவித்துள்ளனர். அதேவேளை தம்பசிட்டி வீதியில் 3/4 கிலோ மீற்றர் வரை காபெற் இடப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வேலைகள் நடைபெற்று வருகின்றன.


(109)



நெடுந்தீவு புனித யுவானியார் தேவாலயத்தில் பரிசுத்த நற்கருணை திருவருட் சாதன விழா கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது.

இதன்போது பங்குத்தந்தை அமல்ராஜ் திருப்பலி ஒப்புக்கொடுத்து 27 சிறார்களுக்கு நற்கருணை வழங்கி வைத்தார். இவ்விழாவில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்களும் கலந்து கொண்டார்.

# குழந்தையின் எதிர்காலத்திற்காக புலம்பெயர் மக்களால் நிதியுதவி



(நயினாதீவு)

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தில் அண்மையில் பிரவசத்தின் போது இறந்த சுரேஷ்குமார் ராஜநந்தினி என்பவரின் குடும்பத்தினருக்கு நயினாதீவு புலம் பெயர் வாழ் கனடா நாட்டு மக்களால் நிதியுதவி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இவருக்கு முதலில் 2 வயது பெண் குழந்தை உள்ளதால் இக்குழந்தையின் எதிர்காலத்திற்காக இக்குழந்தையின் தாயின் பெற்றோரிடம் 1இலட்சத்து 95ஆயித்து 336 ரூபா பணம் வைப்பிலிடப்பட்டு வைப்புப் புத்தகம் வழங்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நயினாதீவு கணேஷ கனிஷ்ட மகா வித்தியாலய நூலக மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டது.

இதில் சுவிஸ் ஒன்றியத்தின் இணைப்பாளரும் ஐயனார் ஆலய அறங்காவலர் சபை தலைவருமான மகாலிங்கம் வேலணை பிரதேசசபை உறுப்பினர் சி.ந.கருணாகர குருமூர்த்தி, பாடசாலை அதிபர் ஆகியோர் இணைந்து வைப்பு புத்தகத்தை வழங்கிவைத்தனர். (175)

# முரசின் இன்றைய பலன்

(07.09.2012 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் ஆவணி மாதம் 22 ஆம் திகதி. நட்சத்திரம் கார்த்திகை. சித்தம் மாலை 5.53 வரை. திதி ஸப்தமி பின்னிரவு 5.29 வரை. இராகுகாலம் 10.36 - 12.08 வரை. சுபநேரம் 6.05 - 7.34 வரை. எமகண்டம் 2.56 - 4.26 வரை. குளிகன் காலம் 7.26 - 8.56 வரை.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | பிறருக்கு உதவுவதில் மன உறுதியுடன் செயற்படுவீர்கள். தொழிலில் தொந்தரவு இருக்கும். வாகனத்தால் செலவு. வெளியூர் பயணம். குடும்பத்தில் ஆதரவு. |
| ரிஷபம் | பிறரை வசீகரிப்பீர்கள். தெய்வ அனுக்கிரகம் உண்டு. தொழில் வளரும். பணம் வரும். உறவினர் நன்மதிப்புடன் நடத்துவர். ஆரோக்கியம். மாணவர்களுக்கு உயர்ச்சி. |
| மிதுனம் | சுபசெய்தி வரும். செயல்களில் உற்சாகம். தொழிலில் அனுகூலம். பணப் பரிவர்த்தனை உண்டு. உல்லாச மனநிலை. தேடிய பொருள் கிடைக்கும். |
| கடகம் | புதியவர்களிடம் கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் போட்டி. பணம் தாமதம். உதவி கேட்கக் கூடாது. உடல் நலம் சீரில்லை. வெளியூர் பயணம் ஏற்படலாம். |
| சிம்மம் | தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பேச்சில் நிதானம் அவசியம். பணவரவு சுமார். வாகன பயணம் கவனம். திட்டமிட்டவை மாறும். நண்பர் வழி காட்டுவர். |
| கன்னி | உயர்ந்த எண்ணங்களும் செயலும். வேலைகள் எளிதாகும். தொழில் சிறந்து தாராள பண வரவு. உதவுவீர்கள். கூடுதல் மதிப்பு, மரியாதை. ஆன்மிக நாட்டம். |
| துலாம் | இன்று விவாதம் வேண்டாம். தொழில் இடத்தில் உதாசீனம் கண்டு சினம். வீண் கௌரவத்தால் செலவு. உடல் நலம் மந்தம். வெளியூர் பயணம் ஏற்படலாம். |
| விருச்சிகம் | மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில் தடங்கல் சரியாகும். பணவரவு. போட்டியில் அனுகூலம். தொல்லை விலகும். கலைஞர்கள் மாணவர்க்கு வெற்றி. உறவு வரவு. |
| தனுசு | சுயமுயற்சிக்குப் பலன். தொழிலில் போட்டி, பொறாமை குறையும். பணவரவு. நிலம் தொடர்பில் அனுகூல பலன். சுபநிகழ்வுகள் நடக்கும்.. குடும்பத்தில் பாசம். |
| மகரம் | உழைப்பினால் உயர்வு. புதிய திட்டங்கள் பலனளிக்கும். ஆதாயம். உறவினர், நண்பர்களிடம் பாராட்டு. பூர்வ சொத்துக்களால் வருமானம் உயரும். புகழ். |
| கும்பம் | வாக்குவாதம் கூடாது. தொழிலில் இடையூறு இருக்கும். ஊழியர்களால் உதவி. பண இலாபம். சேமிப்பு கைகொடுக்கும். உறவினர், குடும்பத்தினரால் நன்மை. |
| மீனம் | பொறுமை காப்பதால் பெருமை. தொழில் இரகசியங்களில் கவனம். குடும்பத் தேவைக்கு கடன். உறவினர் வருகையால் பணி தடங்கல். பிள்ளைகளால் மகிழ்ச்சி. |

நான் என்ற அகந்தையைப் போக்கி விடுவதுதான் அடக்கம் என்பதற்கு உண்மையான பொருள் - மகாத்மா காந்தி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## தீராத கோபம் யாருக்கு லாபம்!

இனமோ மொழியோ மதமோ தேசமோ எதன்மீதும் நாம் வைக்கும் அபரிமிதமான பற்று இறுதியில் பாசிஸத்திற்குத் தான் இட்டுச்செல்லும் என்ற அறிஞர்களின் வாக்கை நாம் நிதர்சனமாகக் கண்டுகொண்டிருக்கிறோம். எதன் பேரைச் சொல்லியாவது நம்முள் வெறுப்பும் பகையுணர்ச்சியும் வளர்த்து விடப்படும்போது நாம் நிதானத்தையும் மனித உணர்வுகளையும் கைவிட்டு விடுகிறோம்.

தமிழ்நாட்டுக்கு சிங்கள யாத்திரிகர்களோடு சென்ற தமிழர்களையும் தாக்கியிருக்கிறார்கள் அங்குள்ள தமிழின உணர்வாளர்கள். முதலில் இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சியளிக்கக் கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். பின்னர் இலங்கை அரசுப் பிரதிநிதிகளும் முன்னறிவிப்பின்றி வரக்கூடாது என்றனர். யாத்திரை போனவர்களைத் தாக்கி, மாணவர்கள் விளையாட்டு வீரர்களைத் தாக்கி, இப்போது சிங்களவரோடு சேர்ந்து வந்தால் தமிழரையும் தாக்குவோம் என்று வெறி முற்றியிருக்கிறது.

போராட்டத்தோடு ஓங்கி எழுந்த தமிழ்த் தேசிய அலையானது இத்தகைய வெறுப்பை உமிழும் மனிதர்கள் உருவாகக் காரணமாகிவிட்டது கவலைக்குரியது. குறிப்பாகத் தமிழ்நாட்டவரின் இந்தக் கோப உணர்ச்சி, அவர்களது நாட்டு அநீதிகளுக்காக ஏன் இவ்வாறு ஆவேசங்கொள்வதில்லை என்பது ஆராயப்பட வேண்டிய கேள்வி.

அங்கும் ஒருதரப்பு தீவிரவாதிகள் குண்டுகளை வைத்து அப்பாவி மக்களைக் கொன்றால், அந்த மாநில அரசின் அனுசரணையுடனேயே ரயில்பெட்டி பெட்டியாகத் தேடி மறுதரப்பு அப்பாவிகள் உயிரோடு கொளுத்தப்பட்ட செய்திகள் அறிகிறோம். இரண்டு மதங்களையும் சேர்ந்த தீவிரவாதிகளால் குரூரம் நிறைந்த கொலைகள் அங்கு நடைபெறுகின்றன. இருந்தாலும் இன்னமும் அங்கே இரு மதத்து மக்களும் சேர்ந்தொன்றாய் வாழ்கிறார்கள்தானே!

ஹிட்லரின் தலைமையில் நாஸிப் படையினரும், அவர்களோடு சேர்ந்து கிழக்கு ஐரோப்பாவின் மற்ற சில நாட்டுப்படைகளும், இரண்டாம் உலகப்போரின் போது கொன்று குவித்த மனித உயிர்களுக்கு, கணக்கே இல்லை. ஆயினும், மிக விரைவாகவே, அங்கெல்லாம் அமைதி திரும்பி, ஐரோப்பாவின் நாடுகள் சிறப்பான சமூகங்களாக ஒன்றுக்கொன்று இசைவுடன் வாழ்ந்து வரவில்லையா? இன்றைய ஜெர்மனி உலகின் தலைசிறந்த சமூகங்களில் ஒன்றாக இல்லையா?

ஏன், சீனா உட்பட தென்கிழக்கு ஆசியாவின் பல நாடுகளில் ஜப்பான் படைகள் செய்யாத வன்முறையா? மிகக் குரூரமாக ஆயிரக்கணக்கான மக்களை அழித்தொழிக்கவில்லையா? கொன்று புதைக்கவில்லையா? எரிக்கவில்லையா? இன்றைக்கு அதே ஜப்பான், உலகின் எல்லா நாடுகளுடனும் மிகச் சிறந்த உறவைப் பேணுவதோடு, ஒரு நல்ல முன்மாதிரி ஜனநாயக சக்தியாக இலங்கைக்கும் அறிவுரைகள் சொல்லும் நிலையில் இல்லையா?

நீண்ட போராட்டப் பாதையில் ஒருவரையொருவர் மாறி மாறிக் கொன்றுகுவித்த தென்னாபிரிக்க இராணுவமும் கறுப்பினப் போராளிகளும் இன்று ஒரே நாட்டில் சேர்ந்துவாழ முடிகிறதே! ஆனால், அயல்நாட்டில் இருந்துகொண்டு சிங்கள யாத்திரிகர்கள் மீதும் இனவெறுப்பை உமிழ்ந்து தாக்குதல்களை நடத்துகிற இவர்களது நோக்கம் என்ன? இலங்கையில் தமிழ்மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை உருவாக விடாமல் தடுப்பதுதானே?

சிங்கள சமூகத்தைத் தொடர்ந்து பகைநிலையில் வைத்திருக்க விரும்புவது யாருடைய லாபம் கருதி? தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள், பகை மறக்காமல் இங்கு நாம் வாழ்ந்துவிட முடியாது. 'பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே' என்ற எங்கள் ஞானி உங்கள் நாட்டில் பிறந்தவனல்லவா! - ஆசிரியர்

## தாதியரின் தவறான தகவலால் நோயாளியைத் தேடி அலைந்த உறவினர்

(யாழ்ப்பாணம்)

பொறுப்பற்ற வினைத்திறன் குறைந்த தாதியர்களின் நோயாளர் பற்றிய தவறான தகவல்களால் நோயாளியைப் பார்க்கச் செல்லும் நோயாளிகளின் உறவினர்கள் அலைக்கழிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த இரண்டாம் திகதி காலில் உடைவு ஏற்பட்ட நோயாளி ஒருவர் 24ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டு வந்தார். நடக்கமுடியாத அந்த நோயாளியுடன் நின்ற உறவினர் அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்து விட்டு, இரவு வீடு சென்று விட்டார். மறுநாள் காலை விடுதிக்குச் சென்று நோயாளியைத் தேடிய போது, நோயாளி உரிய விடுதியில் இல்லாத நிலையில், உறவினர் விடுதிக்கடமையில் இருந்த ஆண் தாதியிடம் குறித்த நோயாளியைப் பற்றி வினாவியபோது, அவர் எக்ஸ்ரே எடுப்பதற்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்திருந்தார்.

இத்தகவல் அறிந்த உறவினர் அப்பகுதிக்குச் சென்று நோயாளியைத் தேடிய போது அங்கே நோயாளி இல்லாதிருப்பதை உணர்ந்தார். மீண்டும் குறித்த விடுதிக்கு வந்து ஆண் தாதியிடம் கூறியபோது, நோயாளி தண்ணீர் எடுக்கச் சென்றிருக்கலாம் எனவும் அங்கு சென்று பார்க்கும் படியும் தெரிவித்திருந்தார். உறவினர் மீண்டும் 24 ஆம் விடுதியிலிருந்து தேநீர்கடை அமைந்துள்ள இடத்திற்குச் சென்று பார்த்தபோது அங்கும் நோயாளியைக் காணாது மருந்து வாங்கும் இடம் முதற்கொண்டு பல இடங்களிலும் தேடிப்பார்த்தும் நோயாளியைச் சந்திக்க முடியாதிருந்துள்ளது.

மீண்டும் குறித்த விடுதிக்கு உறவினர் வந்து அங்கிருந்த பெண் தாதியரிடம் நோயாளி பற்றி வினாவிய போது, எக்ஸ்ரே எடுக்கச் சென்றுள்ளதாக முதற் கூறிய பதிலையே கூறினார்.

நோயாளியின் உறவினர் இது தொடர்பில், பதிவுப்புத்தகத்தைப் பார்க்கும் படியும் அழைத்துச் சென்ற விடுதிச் சிற்றூழியரை விசாரிக்கும் படியும் கூறினார். அவ்வேளை அங்கே கடமையில் இருந்த விடுதி வைத்தியர் குறித்த நோயாளியை வீட்டுக்கு அனுப்பிய செய்தியைத் தெரிவித்திருந்தார்.

ஒரு நோயாளியை விடுதியில் அனுமதிப்பதற்கும், வெளியேற்றுவதற்கும் விடுதியில் ஒழுங்கு விதிகள் ஆவணங்கள் இருக்கும் போது, விடுதியிலே கடமைபுரியும் தாதியர்கள் பொறுப்பற்ற முறையில் தவறான தகவல்களை நோயாளியின் உறவினர்களிற்கு வழங்குவதும், அவர்களை தேவையற்ற முறையில் அலைக்கழித்து மன உளைச்சலுக்கு ஆளாக்குவதும், கண்டிக்கத்தக்க செயலாகும். என நோயாளியின் உறவினர் தெரிவிக்கின்றார். அது மட்டுமன்றி இத்தகைய பொறுப்பற்ற தாதியர்கள் மீது ஒழுங்காற்று விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்து சமய பொதுஅறிவுப்போட்டி; கிளிநொச்சி மாவட்ட முடிவுகள்

(கிளிநொச்சி)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட இந்து சமய பொது அறிவுப்போட்டியில் மாவட்டரீதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்டம் - கிளிநொச்சி, வகுப்பு - 2,

த.தணிகா, துர்க்கை அம்மன் அறநெறிப்பாடசாலை ஆனந்தபுரம் கிளிநொச்சி (பரிசில்தொகை 5000), க.லுவேஜினி கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை பிரமந்தனாறு தருமபுரம் (பரிசில் தொகை 5000), ந.டனுஜா சோதிவிநாயகர் அறநெறிப்பாடசாலை கட்சன்றோட் வட்டக்கச்சி (பரிசில் தொகை 2000).

வகுப்பு - 3,

ச.கயல்விழி பரமசிவன் அறநெறிப்பாடசாலை D2, இராமநாதன் கமம், கிளி (பரிசில் தொகை 3000), ச.டர்சிகா கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை பிரமந்தனாறு தருமபுரம் (பரிசில் தொகை 2000), ம.கவியரசி சித்திவிநாயகர் அறநெறிப்பாடசாலை திருவையாறு கிளிநொச்சி. (பரிசில் தொகை 1000).

வகுப்பு - 4,

சி.பவித்திரன் துர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலை ஆனந்தபுரம் கிளிநொச்சி (பரிசில் தொகை 5000), மோ.நிர்சிகா சித்திவிநாயகர் அறநெறிப்பாடசாலை திருவையாறு, கிளிநொச்சி (பரிசில் தொகை 2000), பு.பௌசிகா கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலை பிரமந்தனாறு தருமபுரம் (பரிசில் தொகை 1000),

வகுப்பு - 6,

அ.கிந்துசன் கற்பகவிநாயகர் அறநெறிப் பாடசாலை பிரமந்தனாறு தருமபுரம் (பரிசில் தொகை 3000)

வகுப்பு - 8,

பீ.தர்மீரா கிருஷ்ணா அறநெறிப்பாடசாலை முழங்காவில் பூநகரி (பரிசில் தொகை 3000).(142)

## மானிய உர விநியோகத்திற்கு வடக்கு வரணியில் பதிவு

வரணி வடக்கு விவசாய சம்மேளனம் மானிய உர விநியோகம பெறுவதற்கான விண்ணப்பப் படிவ பதிவினை கடந்த மூன்றாம் திகதி முதல் மேற்கொண்டு வருகின்றது. எதிர்வரும் 10 ஆம் திகதி வடவரணி விநாயகர் சன சமூக நிலையத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது.

உரிய பயனாளிகள் தேசிய அடையாள அட்டை மற்றும் 60 ரூபா பணத்துடன் வருகை தந்து விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து கொள்ளுமாறு சம்மேளனத்தின் செயலாளர் க.தியாகராசா அறிவித்துள்ளார். (150)

## காலபோக நெற்செய்கைக்கு வயலைப் பண்படுத்தும் விவசாயிகள்

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் கடந்த வாரம் பெய்த மழையினைப் பயன்படுத்தி விவசாயிகள் தமது வயல் நிலங்களை உழுது பண்படுத்தி வருகின்றனர்.

இந்த ஆண்டு கோடை மழை பெய்யாததால் வயல் நிலங்களைப் பண்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. அடுத்து வரும் மாதம் நெல் விதைப்பு ஆரம்பமாகும் என்பதால் விவசாயிகள் மிகுந்த ஆவலுடன் தமது நிலங்களைப் பண்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (150)

## நினைவுநாள்

வாழ்வகம் இல்லத்தின் நிறுவுனர் நினைவு நாளும் நினைவுப் பேருரையும் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.45 மணியளவில் சுன்னாகம் வாழ்வகத்தில் நடைபெறவுள்ளது. வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், வடக்கு மாணமாக விசேட கல்வி அமைச்சின் இணைப்பாளர் திருமதி நிசாந்தி பெர்ணாண்டோ, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அதிபர் வி.கே.இரத்தினகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். வலக்குன்றுதலும் அதன் சவால்களும் என்னும் விடயம் குறித்து நினைவுப் பேருரையை உலக சுகாதார நிறுவன ஆலோசகர் டாக்டர் ந.சிவராசா வழங்கவுள்ளார்.

# கிழக்கு மக்கள்

## சகல இனவாத சக்திகளிடமிருந்தும் தமது மாகாண சபையைக் காப்பாற்ற வேண்டும்!

**தற்செயலாக தமிழ் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைக் கைப்பற்றினாலும், அதற்கு மற்றைய பிரதான கட்சிகளின் ஆதரவு கிடைக்குமா என்பது ஒருபுறமிருக்க, கூட்டமைப்பு மாகாணசபைக்கு தற்போது இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு ஏதாவது செய்வதைவிட, அரசுடன் மல்லுக்கட்டுவதிலேயே காலத்தை விரயமாக்கும் எனவும் மக்கள் கருதுகின்றனர்.**




கிழக்கு மாகாண-சபைத் தேர்தல் 08ஆம் திகதி நடைபெறவுள்ளது. இத்தேர்தல் நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் பலப் பரீட்சைக் களமாக இருப்பதால், தேர்தல் நெருங்க நெருங்க பிரசாரச் சூடும் அதிகரித்துள்ளது. முடிவை அறியும் ஆவலும் அதிகரித்துள்ளது.

நாட்டிலுள்ள மற்றைய மாகாணங்களைவிட கிழக்கின் விசேட அம்சம் என்னவெனில், அங்கு தமிழ் - முஸ்லிம் - சிங்கள என மூவின மக்களும் ஓரளவு சமமான அளவில் சேர்ந்து வாழ்வதுதான். முன்னைய காலங்களில் வடக்கைப் போல கிழக்கும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் அவர்களது பாரம்பரியப் பிரதேசம் என்று சொல்லிக்கொண்டாலும், இன்று அந்த நிலைமை இல்லை. இன்று தமிழர்கள் அங்குள்ள சனத் தொகையில் மூன்றில் ஒரு பங்கினராக மட்டுமே உள்ளனர். முஸ்லிம் மக்களும் சிங்கள மக்களும் இணைந்தால் சனத்தொகையின் மூன்றிலிரண்டாக அவர்கள் இருப்பார்கள்.

கிழக்கின் இன விகிதாசாரம் மாற்றமடைந்ததிற்கு, நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து, முதலாவது ஆட்சியை அமைத்த ஐக்கிய தேசியக் கட்சி தொடக்கி வைத்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் தொடர்ந்ததால்தான், இந்த நிலைமை ஏற்பட்டது என தமிழ்த் தலைமைகள் குற்றம்சாட்டி வந்துள்ளன. அவர்களது குற்றச்சாட்டில் ஓரளவு உண்மை இருப்பினும், அவற்றைத் தடுத்து நிறுத்தக்கூடிய ஆற்றல் வாய்ந்த தமிழ்த் தலைமைகள் இல்லாமல் போனதும் மறு-பாதி உண்மையாகும். இனப் பிரச்சினைக்கான தீர்வுக்காக ஆட்சியிலிருந்த அரசுகள்முன் வைத்த குறைந்தபட்சத் திட்டங்களைக்கூட, எதிர்க் கட்சியாக இருப்பவர்கள் மாறி மாறிக் குழப்பி வந்தது போல, அந்த எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து தமிழ்த் தலைமைகளும் அதைக் குழப்பி வந்துள்ளன என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

தமிழ் மக்களின் முழு உரிமைகளையும் பெற முடியாவிட்டாலும், கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, தமிழ் மக்கள் உடனடியாக எதிர்நோக்கிய சிங்களக் குடியேற்றம், கல்வி-வேலை வாய்ப்பில் இருந்த புறக்கணிப்பு, மொழிப்பிரச்சினை போன்ற விடயங்களில் தன்னும் ஓரளவு தீர்வுகளை எட்ட வாய்ப்புகள் கிடைத்தபோதும், அவற்றை எல்லாம் உதாசீனம் செய்தே தமிழ்த் தலைமைகள் நடந்து வந்துள்ளன.அதன் ஒட்டு மொத்த விளைவே இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் ஆகும். "பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு, இருந்த கோவணத்தையும் இழந்த" கதையாக தமிழ்த் தலைமைகள், எப்பொழுதுமே முழுமையான தீர்வுதான் வேண்டுமென அடம் பிடித்து வந்துள்ளனர். இன்றும் அதுதான் நிலைமை.

தற்பொழுது நடைபெறவுள்ள தேர்தலில் ஆளும் ஐ.ம.சு.கூட்டமைப்பு, த.தே.கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.க., ஜே.வி.பி., சோசலிசக் கூட்டமைப்பு, தேசிய சுதந்திர முன்னணி எனப் பல அரசியல் கட்சிகளும் தனித்தனியாகத் தேர்தலில் போட்டியிடுகின்றன. தனித்தனியாகப் போட்டியிடுவதால், அவற்றுக்கு மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் ஆதரவும் அங்கீகாரமும் உள்ளதென்பதை இத்தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டக்கூடும்.

அம்முடிவுகள் கிழக்கின் இன விகிதாசாரத்தைப் புலப்படுத்தப் போகின்றனவா அல்லது அரசியல் கட்சிகளின் பலத்தைப் பிரதிபலிக்கப் போகின்றனவா என்பது முக்கியமானது.

ஏனெனில் மாகாணசபைத் தேர்தல் ஒன்றில் முதன்முதலாகப் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் முழுமையாகத் தமிழ்க் கட்சிகளே அங்கம் வகிக்கின்றன. முஸ்லிம் காங்கிரஸ் முழுக்க முழுக்க முஸ்லிம்களைக் கொண்ட கட்சியாகும். அதேவேளை ஆளும் ஐ.ம.சு.கூட்டமைப்பில் மட்டும் மூவின மக்களுடைய கட்சிகளும் இணைந்து போட்டியிடுகின்றன. அந்த நிலைமையே அந்த அணியின் வெற்றி வாய்ப்புக்கான அடிப்படையாகவும் இருப்பதாகப் பலரும் கருதுகின்றனர்.

இந்தத் தேர்தல் தமிழ் - முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை முக்கியமானா ஒன்றாகும். ஏனெனில் கிழக்கு மாகாணம் இவ்விரு மக்களினதும்தாயகப் பூமியாகும். ஆனால் துரதிர்ஷ்டவ்சமாக இவ்விரு இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரசும் உச்ச கட்ட இனவாதப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளன.இக்கட்சிகள் தத்தமது இனங்களின் உரிமைகளுக்காக உள சுத்தியுடனும் நேர்மையாகவும் போராடும் கட்சிகளாக இருந்தால், இயல்பாகவே அவர்களது மக்கள் அவர்களுக்கே வாக்களிப்பர். ஆனால் இவ்விரு கட்சிகளும் செய்யும் இனவாதப் பிரசாரத்தைப் பார்த்தால், இக்கட்சிகளுக்குத் தமது மக்களின் மேல் நம்பிக்கை இல்லை என்பதே புலனாகின்றது.

மாகாணசபை என்பது இலங்கையைப் பொறுத்தவரை இன அடிப்படையிலும், மாகாண அடிப்படையிலும் மத்தியில் குவிந்துள்ள அதிகாரங்களைப் பங்கிடும் ஒரு நிர்வாக' அல-காகும். எனவே யார் அதிகாரத்தைக் கைப்பற்றினாலும், மாகாண சபைக்கான அதிகாரத்துக்காகப் போராடுவது அவசியமாகும். தமிழ்க் கூட்டமைப்பின் கைகளுக்கு அதிகாரம் போகுமாக இருந்தால், தமிழ்த் தலைமைகள் கடந்த காலத்தில் கிடைத்த சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் போட்டு உடைத்ததுபோல, இதிலும் நடந்து கொள்வார்கள் என்ற அச்சம் மக்களுக்கு இருக்கிறது.

அண்மையில் கிழக்கு மாகாணத்துக்குச் சென்று அங்குள்ள களநிலவரம் பற்றிஆய்வு மேற்கொண்ட ஒரு புலம்பெயர் தமிழர் ஒருவர், 'வானவில்' இதழுக்குத் தெரிவித்த கருத்துக்கள் முக்கியமானவையாகும். அவர் கருத்தின்படி, பெரும்பாலான தமிழர்கள், தமிழ் பிரதிநிதிகள் அதிகம் கொண்ட ஒரு மாகாண-சபையாகக் கிழக்கு மாகாண-சபை அமைய வேண்டும் என்றே விரும்புகின்றனர். ஆனால் அதற்கான வாய்ப்புகள் பெரும்பாலும் குறைவு என்றும் கருதுகின்றனர்.

தற்செயலாக தமிழ் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைக் கைப்பற்றினாலும், அதற்கு மற்றைய பிரதான கட்சிகளின் ஆதரவு கிடைக்குமா என்பது ஒருபுறமிருக்க, கூட்டமைப்பு மாகாணசபைக்கு தற்போது இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களுக்கு ஏதாவது செய்வதைவிட, அரசுடன் மல்லுக்கட்டுவதிலேயே காலத்தை விரயமாக்கும் எனவும் மக்கள் கருதுகின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை, அதற்கு மாகாணசபையைக் கைப்பற்றும் பலம் எக்காரணம் கொண்டும் கிடைக்கப் போவதில்லை. அதன் முழுத் தந்திரோபாயமும் கிடைக்கும் ஆசனங்களை வைத்துக்கொண்டு, அரசாங்கக் கட்சியுடன் அல்லது தமிழ் கூட்டமைப்புடன் பேரம் பேசுவது மட்டுமே. ஆனால் பெரும்பாலான முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை, முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் சேருவதைவிட, அரசுடன் சேருவதையே விரும்புகின்றன. கிழக்கில், பிட்டும் தேங்காய்ப்பூவும் போல, அடுத்தடுத்த கிராமங்களில் ஆண்டாண்டுகாலமாக ஒற்றுமையாக வாழ்ந்துவந்த தமிழ் - முஸ்லிம் மக்களை முன்னைய தமிழ்த் தலைமைகளும், அவர்களால் வளர்த்துவிடப்பட்ட புலிகளும்தான் பிளவுபடுத்தினார்கள் என்ற கருத்தே அவர்களிடம் மேலோங்கி நிற்கிறது.

அதேவேளை, ஆளும் ஐ.ம.சு. கூட்டணி வெற்றிபெற்று சென்ற மாகாணசபை போல ஒரு தமிழர் முதலமைச்சர் ஆக்கப்பட்டாலும், கிழக்கில் வாழும் தமிழ் - முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டுமா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் இருக்கிறது. ஏனெனில் மத்தியில் உள்ள அரசாங்கம் மாகாண அரசாங்கத்துக்கென குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்களை வழங்க மறுத்து வருவதுடன், இருக்கின்ற சில அதிகாரங்களைக் கூட ஆளுநர் மூலம் தடுக்கின்ற நிலைமையும் கடந்த காலங்களில் இருந்து வந்துள்ளது. எனவே அரசுடன் சேர்ந்து செயற்பட்டு முதலமைச்சர் பதவியைக் கைப்பற்றினாலும், பதவியைப் பெரிதாகக் கருதாது மக்களின் அடிப்படை உரிமைகள், தேவைகளுக்காகத் தமிழ்-முஸ்லிம் பிரதிநிதிகள் போராட வேண்டும் என்ற கருத்து பரவலாக உள்ளதாக அந்த ஆய்வாளர் கூறுகின்றார்.

இலங்கை அரசியல் வரலாற்றை எடுத்துக்கொண்டால், மக்களைப் பொறுத்தவரை மாகாண சபைகள் தற்செயலாக விழுந்த ஒரு பரிசுச் சீட்டு என்றுதான் சொல்லவேண்டும். எனவே அதைப் பாதுகாப்பதும், அதற்கான அதிகாரங்களைப் படிப்படியாகப் பெறுவதும், தமிழர்களுக்கு மட்டுமின்றி இலங்கையின் ஒவ்வொரு மாகாண மக்களுக்கும் அவசியமான விடயமாகும். எனவே அதில் இனவாதச் சேற்றை அள்ளி வீசிப் பிரசாரம் செய்வதைச் சகலரும், குறிப்பாக தமிழ் - முஸ்லிம் கட்சிகள் கைவிட வேண்டும். முக்கியமாக கிழக்கு மாகாணத்திலுள்ள வாக்காளர்கள் இத்தேர்தலில் பிற்போக்குவாத, பிரிவினைவாத, இனவாத சக்திகளுக்கு எதிராகத் தமது தீர்ப்பை வழங்கி, தமது வாழ்வையும் பெருமையையும் நிலைநாட்ட வேண்டும்.

**தமிழ் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸ்ும் உச்சக் கட்ட இனவாதப் பிரசாரத்தில் இறங்கியுள்ளன. இக்கட்சிகள் தத்தமது இனங்களின் உரிமைகளுக்காக உள சுத்தியுடனும் நேர்மையாகவும் போராடும் கட்சிகளாக இருந்தால், இயல்பாகவே அவர்களது மக்கள் அவர்களுக்கே வாக்களிப்பர். ஆனால் இவ்விரு கட்சிகளும் செய்யும் இனவாதப் பிரசாரத்தைப் பார்த்தால், இக்கட்சிகளுக்குத் தமது மக்களின் மேல் நம்பிக்கை இல்லை என்பதே புலனாகின்றது.**

- வானவில்-20 இதழ் தலையங்கத்திலிருந்து

# பலவீனமான வெளியுறவுக் கொள்கை; பொதுமக்கள் பெரும் பாதிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தின் பலவீனமான வெளியுறவுக் கொள்கையினால் மக்களே பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழகத்திற்கு யாத்திரை சென்ற இலங்கையர்கள் பிரச்சினை காரணமாக நாடு திரும்பியுள்ளனர்.

நட்பு பாராட்டும் நாடுகளுடன் நாம் முறுகலை ஏற்படுத்திக் கொள்வதே இந்த நிலைமைக்கான காரணம்.

வழமைக்கு மாறான வெளிநாட்டு இராஜதந்திரிகளே தற்போது இலங்கைக்கு விஜயம் செய்கின்றனர்.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கு உதவிகளை வழங்கிய நாடு உள்ளிட்ட நட்பு நாடுகளுடன் நாம் முறுகலை ஏற்படுத்திக் கொண்டுள்ளோம்.

கௌதம புத்தர் பிறந்த நாடான இந்தியாவுடன் சரியான முறையில் நாம் உறவுகளைப் பேணவில்லை.

எமது நாட்டு மக்கள் மீதான தாக்குதல்களை அனுமதிக்க முடியாது. எனினும், எமது அண்டை நாடுகளுடன் நாம் நட்புறவைப் பேண வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



சர்வதேச இரத்தினக்கற்கள் மற்றும் நகைகள் கண்காட்சி நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.


# தென்கிழக்கு பல்கலையில் புதிய பொறியியல் பீடம்

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தின் கட்டளைக்கமைய அடுதத கல்வியாண்டில் கூடுதலான மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை அமைக்கும் வேலையை துரிதப்படுத்தும் அதேவேளையில் அம்பாறை, ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் புதிய பொறியியல் பீடம் ஒன்றும் அமையவுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

4828 மாணவர்களை கூடுதலாக சேர்த்துக்கொள்ளும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்மொழிவை உயர்நீதிமன்றம் அங்கீகரித்தது. இதன்படி மாணவர் அனுமதி எவ்வித தயக்கமுமின்றி அதிகரிக்கப்படும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார்.

குறைந்தபட்சம் 200 மாணவர்களை அனுமதிப்பதற்காக நாம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தை நிறுவத் திட்டமிட்டுள்ளோம். அத்துடன் யாழ்ப்பாணம் பொறியியல் பீடம் தொடர்பான வேலைகளும் விரைவுபடுத்தப்படும்.



பொறியியல் துறைக்கு கூடுதல் மாணவர்களை அனுமதிப்பதில் மட்டுமே எமக்கு கஷ்டங்கள உள்ளன. கலை, முகாமைத்துவம் போன்ற வேறு பட்டப்படிப்புகள் தொடர்பில் பெரிய பிரச் சினை ஏதுமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திடீரென இவ்வளவு அதிகமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளவது பல்கலைக்கழக முறைமையில் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது. இதையிட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் பேசப்படும் என உபவேந்தர்களின் குழு கூறியுள்ளது.

மருத்துவம், பொறியியல் ஆகியன அதிக செலவுள்ள பட்டப்படிப்புகளாகும், இதில் கூடுதல் மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஏராளமான உட்கட்டமைப்பு வசதிகள் தேவை என அக்குழுவின் தலைவரும் றுகுணு பல்கலைக்கழக உபவேந்தருமான பேராசிரியர் சுசிரித் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

# சுதந்திரக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் ஹிருனிகா



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இறுதிப் பிரசாரக் கூட்டத்தில் ஹிருனிகா பிரேமசந்திர கலந்து கொண்டுளளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பனர் பாரத லகஷ்மன் பிரேமசந்திரவின் மகளான ஹிருனிகா, எதிர்க் கட்சயில் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்பட்டது.

சிவில் விமான. சேவை அமைச்சர் பிரியங்கர ஜயரட்னவின் அழைப்பினை ஏற்றுக் கொண்டு ஹிருனிகா தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் என்னையும் இணைத்துக் கொணடு பொது எதிர்க்கட்சியொன்றை அமைக்க முயற்சிக்கின்றார்கள் என ஹிருனிகா தெரிவித்துள்ளார். எனினும், இந்த தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை.

ஸ்ரீலங்கா மஹாஜன கட்சியை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பையே நான் பிரதிநிதித்துவம் செய்கின்றேன்.


கூட்டமைப்பிலிருந்து விலகி வேறு கட்சியுடன் இணைந்து கொள்ளப் போவதில்லை.

தந்தையின் இரத்தம் வியர்வையினால் பாதுகாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தொடர்ந்தும் பாதுகாப்பேன்.

ஆளும் கட்சியின் வெற்றியை உறுதி செய்யும் நோக்கில் இறுதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றேன் என ஹிருனிகா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஹிங்குராங்கொடவில் நடைபெற்ற இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொணட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# பிரமாணக் குறிப்புகளால் குழப்பம்



(கொழும்பு)

அரசாங்கதுறை உத்தியோகத்தர்களுக்கான புதிய சேவை பிரமாண குறிப்புகள் தோற்றுவித்துள்ள குழப்பங்கள் காரணமாக புதிய நியமனங்களைப் பெற்ற பட்டதாரிகளும் டிப்ளோமாதாரிகளும் பெரும் பிரச்சினைக்கு ஆளாகியுள்ளனர்.

முன்னர் டிப்ளோமாதாரிகளும் பட்டதாரிகளும் சமமாகக் கருதப்பட்டனர். அப்போது, டிப்ளோமாதாரிகளுக்கு நியமனம் பெற்றுக்கொள்வது பிரச்சினையாக இருக்கவில்லை.

ஆனால் புதிதாக வெளியிடப்பட்ட பிரமாணக் குறிப்பு டிப்ளோமாதாரிகள் அரசாங்க நியமனம் பெறுவதில் பிரச்சினைகளைத் தோற்றுவித்துளளது என அகில இலங்கை டிப்ளோமாதாரிகள் சங்கத்தின் தலைவர் என்.டி.எஸ்.நிலங்க தெரிவித்துள்ளார்.

மாவட்ட மட்டத்தில் அதிகாரிகளினால் பின்பற்றப்படுவதாகக் கூறப்படும் சுற்றறிக்கைகள் கற்பனையானவை. உண்மையல் அப்படியான சுற்றறிக்கைகள் இல்லை. இவ்வாறான சுற்றறிக்கை எதனையும் வெளியிடவில்லை என அமைச்சும் மறுத்துள்ளது.

இந்தக் கற்பனைச் சுற்றறிக்கையினால் உயர் தேசிய டிப்ளோமாதாரிகள் பட்டதாரிகளுக்கு சமமானவர்கள் அல்லவெனக் கூறுகின்றது. இதனால், டிப்ளோமாதாரிகள் வேலையின்றி உள்ளனர்.

முன்னர் பட்டதாரி சேவை உத்தியோகத்தர்களுக்கென சேவை பிரமாண குறிப்பு இருக்கவில்லை. இதனால் பிரச்சினையும் இருக்கவில்லை.

உயர் தேசிய டிப்ளோமாதாரிகள் யாழ். மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு வந்த பின்னர் எமது மேல் நடவடிக்கைகள் பற்றி சங்கம் தர்மானிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சொத்துக்கள் முடக்கம்

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல் புள்ளி எனக் கூறப்படும் சமந்த குமார அல்லது வெலே சுதா என்பவருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் சொந்தமான 185 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் முடக்கி வைக்கப்பட்டன.

நெதிமால, தெஹிவளை, கொழும்பு விஜேராம வீதி, பகத்தலை வீதி, ராஜகிரிய ஆகிய இடங்களிலுள்ள 5 ஆடம்பர வீடுகள், பி.எம்.டபிள்யூ. ரேஞ்ச் ரோவர், பிராடோ ரகங்களைச் சேர்ந்த மூன்று வாகனங்கள் மற்றும் பல மில்லியன் ரூபா பெறுமதியான நகைகள் என்பனவும் இச்சொத்துக்களில் அடங்கும்.

# ரணிலின் தடையுத்தரவு நீடிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, கட்சியின் தலைமைத்துவத்தினை நீடித்துக்கொண்டமைக்கு எதிராக கல்கிசை மாவட்ட நீதவான் நீதிமன்றம், முன்னர் வழங்கியிருந்த இடைக்காலத் தடையுத்தரவை எதிர்வரும் 19 ஆம் திகதிவரையில் மீண்டும் நீடித்துள்ளது.

இந்த வழக்கு தொடர்பான மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்ன நீதிமன்றில் தாக்கல் செய்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது மாவட்ட நீதிபதி, பிரியந்த பெர்னாந்துவினால் இந்தத் தடையுத்தரவு நீடிப்புச் செய்யப்பட்டது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் பதவி வருடம் வருடம் தெரிவு செய்யப்படும் என்று தீரமானிக்கப்பட்டாலும், கட்சியின் தலைவர் மற்றும் செயற்குழு ஆறு வருடத்திற்கு அதை நீடித்ததை, கட்சியின் சட்டதிட்டங்களை மீறும் செயற்பாடா கும் என்று மனு தாரர் சார்பில் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மனு தொடர்பான எதிர்ப்பு வெளியிடுவதற்கு காலம் போதாது என பிரதிவாதிகள் சார்பில் மன்றில் தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையில், எதிர்வரும் 19 ஆம் திகதி, இது தொடர்பான எதிர் மனுவை தாக்கல் செய்யுமாறு கல்கிசை மாவட்ட நீதிபதி பிரதிவாதிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

# தஞ்சம் நிராகரிக்கப்பட்டோர் இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளனர்

(கொழும்பு)

பிரித்தானியாவில் இருந்து அகதி தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கையர்கள் எதிர்வரும் செப்டம்பர் 19 ஆம் திகதி pvt 030 என்ற விசேட விமானத்தில் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளனர் .

இந்த விமானம் பிரித்தானியாவில் இருந்து 19 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு புறப்படுகின்றது.

இவ்விதம் அகதி தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் கையொபபமிடச் செல்லும் வேளை அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு அவர் களுக்கான விமானச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்விதம் எதிர்வரும் பதினெட்டாம் திகதி வரை இந்த சீட்டுக்கள் குடிவரவு குடியகல்வு அமைச்சினால் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இலக்கிய நூல்கள் விருது - 2011

இலங்கை இலக்கியப் பேரவையின் 2011 ஆம் ஆண்டிற்கான இலக்கிய நூல்கள் தெரிவில் விருதுபெறும் நூல்களும், சான்றிதழ் பெறும் நூல்களும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு** - 'தென்னிலங்கையின் புராதன கோயில்கள்' என்.கே.எஸ்.திருச்செல்வம்.

**சான்றிதழ்** - 'எகிப்து முதல் இலங்கை வரை இஸ்லாமியர்களின் இசைஞானம்' கலாஜோதி மௌலவி - காத்தான்குடி பௌஸ.

**காவியம்** - 'வாத்தியார் மாப்பிள்ளை' காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன், கொழும்பு.

**சான்றிதழ்**- 'தோட்டுப்பாய் மூத்தம்மா' பாலமுனை - பாறூக்.

**கவிதை** - 'துயரக்கடல்' கி.பி.நிதுன், முல்லைத்தீவு.

**சான்றிதழ்**- 'கறுப்பு மழை' பெரிய ஐங்கரன், திருமலை.

**நாவல்** - 'சொடுதா' எஸ்.ஏ. உதயன் பேசாலை, மன்னார்.

**சான்றிதழ்**- 'அலைக் குமிழ்' அகளங்கன், வவுனியா.

**சிறுகதை** - 'அனுசுயாவின் கரடி பொம்மை' சந்திரகாந்தா முருகானந்தன், கொழும்பு.

**சான்றிதழ்** - 'அங்கயற்கன்னியும் அவள் அழகிய உலகமும' தாட்சாயணி, சாவகச்சேரி.

**சறுவர் இலக்கியம்** - 'சந்திரன் கதை' கலாபூசணம் கேணிப்பித்தன், திருமலை.

**சான்றிதழ்** - 'படைப்புகள் மூலம் அல்லாஹ்வை அறிவோம்' எம்.எஸ்எம்நுஸைர், காத்தான்குடி.

**சமயம்** - 'முன்னோர் சொன்ன கதைகள்' யோகேஸ்வரி சிவப்பிரகாசம், கோப்பாய்.

**சான்றிதழ்** - 'ஸ்ரீமத் பகவத் கீதை சுலோகம், உரை, விளக்கம், கதைகள் தமிழறிஞர் - கே.வி.குணசேகரன், கோப்பாய்.

**மொழிபெயர்ப்பு** - 'முல்லைத தீவுத் தாத்தா' திக்குவல்லை கமால.

**சான்றிதழ்**- 'இந்த நிலம் எனது' கெக்கிராவ ஸீலைஹா.

**அறிவியல்** - 'எண்ணங்களும் வண்ணங்களும்' கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு, நல்லூர்.

**பல்துறை** - 'நேற்றுப்போல இருக்கிறது' தெகிவளை கே.எஸ்.பாலச்சந்திரன்.

**நாடகம்** - 'குறுங் கூத்துக்கள (ஐந்து தென்மோடிக் கூத்துக்கள)' கலையார்வான் (கு.இராயப்பு) யாழ்ப்பாணம்.

விருதுகள், சான்றிதழ்கள் வழங்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும் என இலங்கை இலக்கியப் பேரவை செயலாளர் சி.சிவதாசன் அறிவித்துள்ளார்.

# விசமிகள் அட்டகாசம் பொதுமக்கள் விசனம்

(வரணி)

வடக்கு வரணிப் பிரதேசத்தில் இரவுவேளை விசமிகள் சில தனியார்களுக்குச் சொந்தமான காணிகளில் வேலிகளை நாசப்படுத்தியும் தூண்களை அடித்து நொருக்குவதும் மற்றும திருட்டுக்களில் ஈடுபடும் சம்பவங்களும் தொடர்ந்த வண்ணமுள்ளன.

கடந்த வாரம் வரணி சைவப் பிரகாச வித்தியாசாலை நீர் இறைக்கும் மோட்டார் மற்றும் வர்த்தகர் ஒருவரது பசுமாடு, மரக்கடத்தல் என்பன இடம் பெற்றுள்ளன.

கடந்த வியாழன் இரவு வீட்டு வாசலில் கட்டப்பட்டிருந்த இரண்டு மறி ஆடுகளை நள்ளிரவு நேரம் வாகனத்தில் வந்த திருட்டுக் கோஷ்டி அபகரித்துச் சென்றுள்ளது.

கடத்தப்பட்ட இரண்டு ஆடுகளின் பெறுமதி சுமார் 17 ஆயிரம் ரூபா என வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இச்சம்பவம் பற்றி கொடிகாமம் பொலிஸாரிடம் ஆட்டு உரிமையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளதாக தினமுரசுக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

இனிவரும் நாட்களில் பொலிஸாரின் அனுமதியுடன் கிராமத்திற்கு விழிப்புக்குழு ஒன்று உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (150)

# கிளி. மாவட்டத்தில் 97 பாடசாலைகளில் 28, 808 மாணவர்கள் கல்வி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 97 பாடசாலைகள் இயங்கி வருவதுடன் 28, 808 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

1647 ஆசிரியர்கள் பணியாற்றி வருவதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் பல பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக இயங்கி வருகின்றன.

பூநகரிக் கல்விக் கோட்டத்தில் பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தியில் ஆரோக்கியமான விடயமாக இந்தப் புள்ளி விபரங்கள் தென்படுவதாக கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர். (142)

# கைதிகள் தினத்தில் சேர்ந்து உணவருந்தலாம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கைதிகள் தினம் எதிர்வரும் 12 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுவதனை முன்னிட்டு சிறைச்சாலைக் கைதிகளுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

இதன் ஒரு கட்டமாக யாழ். சிறையிலுள்ள கைதிகளுக்கும் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கைதிகள் தமது உறவினர்களோடு இணைந்து உணவருந்தலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (53)

# கலாசாரத்தை பின்பற்றவும்

(பருத்தித்துறை)

வடமராட்சி சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவத்தின் போது தமிழ் பண்பாடு கலாசாரத்திற்கு அமைவான உடைகளை அணிந்து வருமாறும், தங்க நகைகளை அணிய வேண்டாம் எனவும் ஆலய அறங்காவலர் சபையினர் பொது மக்களுக்கு அறிவித்துள்ளனர். (109)




கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானம் - ஆண்கள்

| திகதி | நேரம் | மோதல்கள் | பங்குபற்றும் அணிகள |
|---|---|---|---|
| சனிக்கிழமை 08.09.2012 | 10.00மு.ப 01.00 பி.ப | ஆட்டம் 01 | கிளிநொச்சி இணைப்பு அணி எதிர் சினிகம FOG அணி |
| | 02.00பி.ப 05.00 பி.ப | ஆட்டம் 02 | மட்டக்களப்பு திருகோணமலை இணைப்பு அணி எதிர் சென் பீற்றர்ஸ் கல்லூரி |
| ஞாயிற்று கிழமை 09.09.2012 | 10.00மு.ப 01.00 பி.ப | ஆட்டம் 01 | மட்டக்களப்பு திருகோணமலை இணைப்பு அணி எதிர் சினிகம FOG அணி |
| | 02.00பி.ப 05.00 பி.ப | ஆட்டம் 02 | கிளிநொச்சி இணைப்பு அணி எதிர் சென் பீற்றர்ஸ் கல்லூரி |
| திங்கள் கிழமை 10.09.2012 | 10.00மு.ப 01.00 பி.ப | ஆட்டம் 01 | கிளிநொச்சி இணைப்பு அணி எதிர் மட்டக்களப்பு திருகோணமலை இணைப்பு அணி |
| | 02.00பி.ப 05.00 பி.ப | ஆட்டம் 02 | சினிகம FOG அணி எதிர் சென் பீற்றர்ஸ் கல்லூரி |
| செவ்வாய் கிழமை 11.09.2012 11.00மு.ப 02.00 பி.ப | 11.00மு.ப 02.00 பி.ப | அரை இறுதி ஆட்டம் | |

மாங்குளம் மகா வித்தியாலய மைதானம் - பெண்கள்

| திகதி | நேரம் | மோதல்கள் | பங்குபற்றும் அணிகள |
|---|---|---|---|
| சனிக்கிழமை 08.09.2012 | 10.00மு.ப 01.00 பி.ப | ஆட்டம் 01 | கிழக்கு மாகாண இணைப்பு அணி எதிர் இராஜுல பெண்கள் அணி |
| | 02.00பி.ப 05.00 பி.ப | ஆட்டம் 02 | சினிகம பெண்கள் அணி எதிர் சக்தி பெண்கள் அனுராதபுரம் |
| ஞாயிற்று கிழமை 09.09.2012 | 10.00மு.ப 01.00 பி.ப | ஆட்டம் 01 | கிழக்கு மாகாண இணைப்பு அணி எதிர் சக்தி பெண்கள் அணி |
| | 02.00பி.ப 05.00 பி.ப | ஆட்டம் 02 | சினிகம பெண்கள் அணி எதிர் இராஜுல பெண்கள் அணி |
| திங்கள் கிழமை 10.09.2012 | 10.00மு.ப 01.00 பி.ப | ஆட்டம் 01 | சினிகம பெண்கள் அணி எதிர் கிழக்கு மாகாண பெண்கள் அணி |
| | 02.00பி.ப 05.00 பி.ப | ஆட்டம் 02 | இராஜுல பெண்கள் அணி எதிர் சக்தி பெண்கள் அணி |
| செவ்வாய் கிழமை 11.09.2012 | 11.00மு.ப 02.00 பி.ப | அரை இறுதி ஆட்டம் | இல :- 1, இல:- 2 குழு |

# பாகிஸ்தான் இலகு வெற்றி



(அபுதாபி)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலாவது ருவென்ரி -20 கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி இலகுவாக வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலிய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டித் தொடரின் முதற் போட்டியில் நேற்று முன்தினம் டுபாய் சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டேவிட் வோனர் 25 பந்துகளில் 22 ஓட்டங்களைப் பெற்றார். அவரைத் தவிர, வேறு எந்த வீரரும் 20 ஓட்டங்களைப் பெற்றிருக்காத அதே வேளை, மூன்று வீரர்கள் மாத்திரம் இரட்டைப்படை ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் சொஹைஹன் தன்வீர் 3, சயீட் அஜ்மல், ராசூஷா ஹசன், மொஹமட் ஹபீஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். 90 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 14.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்து 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுக் கொண்டது. இதில் கம்ரன் அக்மல் 24 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் நாயகனாகக் மொஹமட் ஹபீஸ் தெரிவானார்.

# தொடரை சமப்படுத்தியது தென்னாபிரிக்கா

(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் இலகுவாக வென்ற தென்னாபிரிக்க அணி தொடரைச் சமப்படுத்தியது.

இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் ஐந்தாவதும், இறுதியுமான ஆட்டம் நேற்று முன்தினம் ட்ரென்ட் ப்ரிட்ஜ் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 45.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

அலஸ்ரெயர் குக் 51, கிறெய்க் கீஸ்வெட்டர் 33, கிறிஸ் வோக்ஸ் ஆட்டமிழக்காமல் 33, ஜொனி பெயர்ஸ்ரோ 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ரொபின் பீற்றர்சன் 3, டேல் ஸ்ரெய்ன் மோர்னி மோர்க்கல் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

183 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 34.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ஹசிம் அம்லா 107 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 97 ஓட்டங்களையும், ஏ.பி.டி.வில்லியர்ஸ் 79 பந்துகளில் ஆட்ட மிழக்காமல் 75 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜேம்ஸ் அன்டர்சன் 41 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் 2-2 என்ற கணக்கில் சமநிலைபெற்றது. போட்டியின் நாயகனாகவும், போட்டித் தொடரின் நாயகனாகவும் தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லா தெரிவானார்.



# கப்டன் பதவியிலிருந்து விலகும் நோக்கம் இல்லை

(அபுதாபி)

கப்டன் பதவியிலிருந்து விலகும் நோக்கம் எனக்கு ஏற்படவில்லை. தொடர்ந்தும் பாகிஸ்தான் அணிக்குத் தலைமை தாங்கவே விரும்புகின்றேன் என மிஸ்பா உல் ஹக் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணியை வழி நடத்தி செல்வதில் பெருமைப்படுகிறேன். தனிப்பட்ட முறையில் எனது ஆட்டம் சிறப்பாகவே உள்ளது. ஒவ்வொரு போட்டிக்கும் நான் சிறந்த வீரர்களைதான் தேர்வு செய்தேன். அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரை இழந்தது ஏமாற்றம் அளிக்கிறது. இதன் மூலம் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்வது தேவையாகிறது.

ஒரு சில தவறுகளை தொடர்ந்து செய்கிறேன். அதில் முன்னேற்றம் தேவை. எனது ஆட்டம் நன்றாக இருக்கிறது. அணியை சிறப்பாக வழி நடத்தி செல்கிறேன். இதனால் கப்டன் பதவியில் இருந்து விலகும் திட்டம் எதுவும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.



# பெடரர் அதிர்ச்சித் தோல்வி

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் உலகின் முதல் நிலை வீரரும், 5 முறை சம்பியனுமான ரோஜர் பெடரர் காலிறுதி ஆட்டத்தில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார். அத்துடன் பெண்கள் அரையிறுதிக்கு ஷரபோவா, செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர். கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் நடைபெற்று வருகிறது. பெடரர் 6ஆம் நிலை வீரரான தோமஸ் பெர்டிச்சை (செக்குடியரசு) எதிர்கொண்டார். இதில் யாருமே எதிர்பாராத வகையில் பெடரர் அதிர்ச்சிகரமாக தோற்றார். பெர்டிச் 7-6 (7-1), 6-4, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் பெடரரை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். இதேவேளை, பெண்கள் பிரிவில் நடந்த காலிறுறுதி ஆட்டம் ஒன்றில் 3ஆம் நிலை வீராங்கனையான மரிய ஷர போவா (ரஷ்யா) 3-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் 11ஆம் நிலை வீராங்கனையான பர்ட்டோலியை (அமெரிக்கா) வென்றார். இதேபால செரீனா வில்லியம்சும் (அமெரிக்கா) அரை இறுதிக்கு முன்னேறினார். 4ஆம் நிலை வீராங்கனையான செரீனா 6-1, 6-3 என்ற நேர்செட் கணக்கில் இவானோவிக்கை (சேர்பியா) தோற்கடித்தார். பெண்கள் அரையிறுதியில் அசரென்கா (பெலா ரஸ்) - ஷரபோவா (ரஷ்யா)வும், மற்றுமொரு அரையிறுதியில் செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) - சாரா இரானி (இத்தாலி)வும் மோதவுள்ளனர்.

# மூன்று விருதுகள் வென்ற குமார் சங்கக்கார



(கொழும்பு)

சியட் மக்கள் நாயகன் விருது உட்பட மூன்று விருதுகளை இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவரும் நட்டசத்திர துடுப்பாட்ட வீரருமான குமார் சங்கக்கார வென்றுள்ளார்.

இந்தியாவின் மிகப்பெரிய டயர் நிறுவனமாகத் திகழும் ஆர்.பி.ஜி. குழுமத்தின் முன்னணி நிறுவனமான சியட் லிமிடெட் நிறுவனம் ஆண்டுதோறும் சியட் விருதுகளை கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கி கௌரவித்து வருகின்றது. இந்நிலையில் 2012 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழா கொழும்பு வோட்டர்ஸ் ஹெஜ்சில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஆண்டின் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர், ஆண்டின் மக்கள் விருப்பத்திற்கான வீரர், ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் ஆகிய விருதுகள் சங்கக்காரவுக்கு கிடைத்தன.

மேலும் வளர்ந்துவரும் சிறந்த வீரருக்கான விருதிற்கு தினேஸ் சந்திமால் தெரிவு செய்யப்பட்டார். ரங்கண ஹேரத்த ஆண்டின் சிறந்த டெஸ்ட் பந்து வீச்சாளராக தெரிவு செய்யப்பட்டதோடு லசித் மாலிங்க ஒருநாள் போட்டியின் ஆண்டின் சிறந்த பந்து வீச்சாளராக தெரிவு செய்யப்பட்டார்.

ஒருநாள் போட்டியின் ஆண்டின் சிறந்த துடுப்பாட்ட வீரராக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜயவர்தன தெரிவு செய்யப்பட்டதோடு ஒரு நாள் போட்டியின் ஆண்டின் சகலதுறை வீரராக டி.எம். டில்சான் தெரிவு செய்யப்பட்டார்.

# சச்சின் விரைவில் மீள்வார்

(புதுடில்லி)

சச்சின் மூன்று முறை கிளீன் போல்டு ஆனதால் அவரது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிட்டதாகக் கூற முடியாது. விஸ்வநாத், லக்ஸ்மன் போன்ற சிறந்த வீரர்கள் பலரும் இதுபோன்ற சிக்கலை எதிர்கொண்டுள்ளனர். ஆனால், சச்சின் இதிலிருந்து விரைவில் மீள்வார் என சஞ்சே மஞ்ரேக்கர் தெரிவித்தார்

கிரிக்கெட் நுணுக்கங்கள் அனைத்தையும் நன்கு அறிந்த சச்சின், இந்த சரிவில் இருந்து மீண்டு வருவார் என நம்புகிறேன். உள்ளூரில் இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கு எதிராக நடக்கவுள்ள தொடர்கள் மட்டுமல்ல, நவம்பரில் தென்னாபிரிக்கா செல்ல உள்ள இந்திய அணியிலும் அவர் விளையாட வேண்டும் என விரும்புகிறேன். தோல்வியை ஒருபோதும் சகித்துக் கொள்ளாதவர். அவர். சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பவர் என்பதால், அடுத்து வரும் தொடர்களில் அதிக ஓட்டம் குவித்து அசத்துவார் என நம்புகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# நெருக்கடியே எனது திறமை வெளிப்படக் காரணம்

(புதுடில்லி)

நெருக்கடியான நேரங்கள் தான் என்னிடம் உள்ள திறமைகளை வெளிக்கொண்டுவர உதவியது என, ஓய்வு பெற்ற இந்திய வீரர் லக்ஸ்மன் தெரிவித்தார்.

எப்போதெல்லாம் அணி நெருக்கடியான நேரத்தில் தவிக்கிறதோ, அதுபோன்ற கடினமான சூழ்நிலையில் விளையாட எனக்கு அதிகம் பிடிக்கும். இதுதான் என்னிடம் உள்ள திறமைகளை வெளிக்கொண்டு வந்தது. இதனால் தான் ஹைதராபாத்தின் முக்கிய துடுப்பாட்ட வீராக உருவெடுத்தேன் என்று நினைப்பதுண்டு.

சிக்கலான நேரங்களில் பொறுப்பெடுத்துக் கொண்டு, வழக்கத்துக்கு மாறாக அதிக திறமை வெளிப்படுத்துவேன். இப்படி நெருக்கடியான நேரங்களில் சிறப்பாக விளையாடுவது தான் எனது பெரிய வலிமை. ஒவ்வொரு வீரருக்கும் ஒரு திறமை இருக்கும். அது அணியின் வெற்றிக்கு உதவ வேண்டும். துடுப்பாட்ட வீரராக இருந்து அணிக்குத் தேவையான ஓட்டங்கள் எடுப்பது, கிடைக்கும் வாய்ப்புகளில் காட்ச் செய்வது தான் எப்போதும் எனது வேலை. என்னை சிறப்பான துடுப்பாட்டத் திறனுள்ள வீரராக பார்த்த அனைவருக்கும் நன்றி.

சச்சின், கங்குலி, கும்ளே என, அனைவருமே என்னைக் கவர்ந்தனர். இந்த வீரர்கள் அனைவருமே, அணியின் கப்டனாக இருந்தவர்கள். இவர்களது திறமை குறித்த அனுபவங்களை, ஓய்வறையில் கேட்டுத் தெரிந்து கொள்வேன். இந்தியாவுக்காக தொடர்ந்து திறமை வெளிப்படுத்த வேண்டும் என்ற இலட்சியம் மட்டுமே இவர்களிடம் இருந்தது எனத் தெரிவித்தார்.

# கிண்டலடிக்கும் பொம்மை




சச்சின் சமீபகாலமாக மோசமாக விளையாடி வருவதால், அவரைக் கிண்டலடிக்கும் விதமாக பொம்மை படம் ஒன்றை வெளியிட்டுள்ளது அமுல் நிறுவனம். சச்சினைப் போன்ற பொம்மை உருவம் ஒன்று கிரிக்கெட் போட்டியில் போல்டாகி ஏமாற்றத்துடன் நிற்பது போலவும், ஆடுகளத்திற்கு செல்லும் அமுல் சிறுமி அவரை கால்களை நன்கு நகர்த்தி விளையாட அமுல் வெண்ணெய் சாப்பிடுமாறு கூறுவது போலவும் அமுல் நிறுவனம் வடிவமைத்துள்ளது. இந்தப் பொம்மைப் படம் அமுல் நிறுவனத்தின் டுவிட்டர் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

# கலந்துரையாடல்

(சங்கானை)

சங்கானை பிரதேசசெயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில், 21 வயதுப் பிரிவிற்கான உதைபந்தாட்ட போட்டிகளில் கலந்துகொள்ளும் கழகங்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு சங்கானைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனைத்துக்கழகங்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கானைப் பிரதேச செயலக பதில் விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். இக்கலந்துரையாடலில் முக்கியமான தீர்மானங்கள் சிலவும் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (93)

# கரப்பந்து இறுதி ஆட்டம் இன்று

(புத்தூர்)

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் 46ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய கரப்பந்தாட்டப்போட்டிகளின் இறுதிப்போட்டிகள் இன்று இரவு 6.30 மணிக்கு புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கழகத்தலைவர் தலைமையில் நடைபெறும் இவ் இறுதிப் போட்டிக்கு பிரதமவிருந்தினராக ஜனாதிபதி ஆலோசகர் தேசமானிய ராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு பிரதேசசபை தவிசாளர் உதயகுமார் மற்றும் கோப்பாய் பிரதேசசெயலக செயலாளர் பிரதீபன், கௌரவவிருந்தினராக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டசங்கத்தலைவர் மனோகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இன்று நடைபெறும் இறுதிப்போட்டிகளில் 'பி' பிரிவுக்கான இறுதிப்போட்டியில் இந்து இளைஞர் 'பி' அணியும் அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதவுள்ளன. யு பிரிவிற்கான இறுதிப் போட்டியில் இந்துஇளைஞர் 'ஏ' அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதவுள்ளன. இவ்விறுதிப்போட்டிகள் மிகுந்த பரபரப்பு மிக்க போட்டியாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை (93, 118)

# அனோஜன் நினைவு மென்பந்து காலிறுதியில் மட்டுவில் கலைவாணி

(மட்டுவில்)


மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் தென்மராட்சிப் பிரதேசமட்டத்திலான அனோஜன் நினைவு மென்பந்து கிரிக்கெட் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு மட்டுவில் கலைவாணி அணி தகுதிபெற்றுள்ளது.

அணிக்கு ஒன்பது பேர் கொண்ட இம்மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடர் 12 ஓவர்களைக் கொண்டதாகும். கடந்த 3ஆம் திகதி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஒன்றில் மட்டுவில் கலைவாணி அணியும், நுணாவில் அம்பாள் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மட்டுவில் கலைவாணி அணி 12 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நந்தகோபன் 14, தாஸ் 07 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சசி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 54 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நுணாவில் அம்பாள் அணி ஒன்பது ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜெசி மட்டும் 10 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் வினோதன் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தி அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்தார். இப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் மட்டுவில் கலைவாணி அணி காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (118)

## நீச்சல் வீரர்களுக்குச் சான்றிதழ்




(காரைநகர்)

பொசன் விழாவை முன்னிட்டு நடைபெற்ற உயிர் காக்கும் பணி செயற்பாட்டில் சிறந்த நீச்சல் வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை காரைநகர் கசூரினா கடற்கரை மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை பொலிஸின் 146ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு, ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய நீச்சல் பயிற்றுநர் ஜ.பி. ஹேரத் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில், யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் மற்றும் காரைநகர் தியாகராஜா மகா வித்தியாலய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் சிறந்த நீச்சல் வீரர்களாகத்தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கு யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா மற்றும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் செ.ஸ்ரீ.குகநேசன் ஆகியோர் சான்றிதழ்கள் வழங்கி வைத்தனர். இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான நீச்சல் பயிற்சிகளும் இதன்போது வழங்கப்பட்டன.

## முதல் ருவென்ரி –20 நாளை

(விசாகபட்டிணம்)

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் முதல் ஆட்டம் நாளைய தினம் விசாகபட்டிணத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே, டெஸ்ட் தொடரை இழந்துள்ள நிலையில் இப்போட்டித் தொடரில் வெற்றியைப் பதிவாக்கிக் கொள்வோம் என நியூசிலாந்து அணித்தலைவர் டெய்லர் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண ருவென்ரி –20 தொடருக்கு இப்போட்டிகள் சிறந்த பயிற்சியாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இளவாலை யங்கென்றிஸ் கால்பந்தாட்டத்தில் சம்பியன்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 7 பேர் பங்குபெறும் விலகல் முறையிலான கால்பந்தாட்டச்சுற்றுப்போட்டித்தொடரில் இளவாலை யங்கென்றிஸ் அணி சம்பியனானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நவாலி அட்டகிரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் அணியும் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மோதின. பரபரப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் அணி 4 - 1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது. யங்கென்றிஸ் சார்பாக மூன்று கோல்களை அடித்து அசத்திய ஞானம், போட்டியின் ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். தொடரின் ஆட்டநாயகனாக சென். மேரிஸ் அணியின் ஜெராட் தெரிவானார். இறுதிப்போட்டி நிறைவுற்றதும் இரசிகர்கள் கைகலப்பில் ஈடுபட்டு பின்பு பாதுகாப்புபடையினர் தலையிட்டும் சண்டை பெரிதாக மாறிவிட்டது. விருந்தினர் மண்டபமும் கல் வீச்சில் சேதமானது. மூன்றாமிடத்துக்கான போட்டி நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணிக்கும் இளவாலை சென்லூட்ஸ் அணிக்கும் இடையில் நடைபெறவிருந்தது. மூன்றாமிடத்துக்கான போட்டிக்கு நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி வருகைதராததன் காரணமாக இளவாலை சென்லூட்ஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (93)

## அளவெட்டி மத்தியின் மென்பந்து நாளை முதல் ஆரம்பம்

(அளவெட்டி)

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் மிகப்பிரமாண்டமாக நடத்தும் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை முதல் எதிர்வரும் 22 ஆம் திகதிகளில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இத்தொடரில் வடமாகாணத்தைச் சேர்ந்த 40 அணிகள் பங்குகொள்கின்றன. இந்த அணிகள் அனைத்தும் ‘ஏ’, ‘பி’, ‘சி’, ‘டி’ என நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, போட்டிகள் இடம்பெறும்.

‘ஏ’, ‘பி’ குழுக்களுக்கான போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும் இடம்பெறும் அதேவேளை, ‘சி’, ‘டி’ குழுக்களுக்கான போட்டிகள் 15, 16 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

இத்தொடரில் பங்குகொள்ளும் அணிகள், குறித்த நேரத்தில் போட்டிகளுக்கு வருகை தந்து போட்டிகளை குறிப்பிட்ட காலத்தில் நடாத்திமுடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## முரளி வெற்றிக் கிண்ண கிரிக்கெட்

(கிளிநொச்சி)

முரளி வெற்றிக் கிண்ண ருவென்ரி -20 கிரிக்கெட் போட்டித் தொடர் நாளை முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை மூன்று மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் 14 மாவட்டங்களுக்கிடையே தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் இப்போட்டித் தொடர் நடைபெறவுள்ளது.

இதில் கிளிநொச்சி மத்திய கல்லூரி, ஒட்டுசுட்டான் மற்றும் மாங்குளம் ஆகிய மைதானங்களில் இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இதில் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் முறையே எதிர்வரும் 11,12ஆம் திகதிகளில் ஒட்டுசுட்டான் ம.வி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டித் தொடர் வடக்கிலுள்ள வீரர்களின் கிரிக்கெட் ஆர்வத்தை மேலும் வளர்த்துக்கொள்ளும் முகமாகவே மேற்படி நிலையங்களில் போட்டிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. 2.8, (142)

## கிளிநொச்சி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த ஜெயராணி




டபிள்யு.டி.ஜே. செனவிரட்ண நினைவுக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் தொடரின் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தைச் சேர்ந்த திருமதி ப. ஜெயராணி, தொடரின் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவு செய்யப்பட்டு மாவட்டத்திற்கு பெருமை தேடிக்கொடுத்துள்ளார்.

இலங்கையின் சகல மாவட்டங்களுக்குமிடையிலான பதவி நிலை அலுவலர்களுக்கான டபிள்யு.டி.ஜே. செனவிரட்ண நினைவுக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் கடந்த 31ஆம் திகதி முதல் முதலாம் திகதி வரை நுவரெலியா மாவட்டத்திலுள்ள மாநகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் வடகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அனைத்து மாவட்ட அணிகளும் பங்குகொண்டன.

இப்போட்டித் தொடரில் முதலாமிடத்தை மொனராகலை மாவட்டமும், இரண்டாமிடத்தை அநுராதபுரம் மாவட்டமும் பெற்றுக்கொண்டன. இப்போட்டித் தொடரில் சிறப்பான முறையில் பந்து வீச்சை மேற்கொண்டு, தனது திறமைகளை வெளிக்கொணர்ந்த கிளிநொச்சி மாவட்டச் செயலக தலைமைப் பீட பணிமனையில் பயியாற்றும் திருமதி ப. ஜெயராணி சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டித் தொடர் அடுத்த வருடம் மொனராகலை மாவட்டத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டித் தொடரில் பங்குகொண்ட கிளிநொச்சி மாவட்ட அணியை மேலே காணலாம். (142)

## வடமாகாண விளையாட்டு விழா கிளிநொச்சியில் ஏற்பாடுகள் தீவிரம்

(கிளிநொச்சி)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டுகின்ற மாவட்டங்களுக்கிடையிலான மாகாண விளையாட்டு விழாவுக்கு ஏற்பாடுகள் மிகவும் தீவிரமான முறையில் மாகாண விளையாட்டுத்திணைக்களத்தினாலும், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரிமைதானத்தில் எதிர்வரும் 15,16ஆம் திக்திகளில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஆயத்த வேலைகளை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துடன் இணைந்து வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (142)

# தேவை நிதானம், ஆத்திரமல்ல!

இலங்கையைச் சேர்ந்த கால்பந்து விளையாட்டு வீரர்கள் இந்திய சுங்கத் துறை கால்பந்து அணியுடன் நட்புரீதியில் விளையாடுவதற்கு அனுமதி தந்த ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்க அலுவலர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு அநீதி இழைக்கிறது என்பதில், இலங்கை அரசின் மீதான நமது கோபம் நியாயமானது. ஆனால், இலங்கையைச் சேர்ந்த, கேள்விப்படாத ஒரு கால்பந்து அணி விளையாடக் கூடாது என்று சொல்வதும், அந்த அணியை அனுமதித்த அதிகாரியைப் பணியிடை நீக்கம் செய்வதும் அரசியல் எதிர்வினைகளாக இருக்க முடியுமே தவிர, சரியான இராஜதந்திர நடவடிக்கையாக இருக்க முடியாது.

இலங்கைத் தமிழர் மீது மிக வன்மையான தாக்குதல் நடைபெற்ற நாளில், இலங்கை கிரிக்கெட் அணி இந்திய அணியுடன் விளையாடியது. அவர்களைத் திருப்பி அனுப்பவில்லை. இந்திய அணி இலங்கையில் விளையாடியது. தமிழ்நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள் இந்த ஆட்டத்தில் பங்கேற்கக்கூடாது என்று நாம் கேட்கவும் இல்லை. இந்திய-இலங்கை அணியின் கிரிக்கெட் விளையாட்டைத் தமிழ்நாட்டிலுள்ள தொலைக் காட்சிச் சனல்கள் ஒளிபரப்பக் கூடாது என்று தடை விதிக்கவில்லை. தமிழகத்தைச் சேர்ந்த ஆன்மிகவாதிகள், திரைப்பட நட்சத்திரங்கள் டி.எம். கிருஷ்ணா உள்ளிட்ட கர்நாடக சங்கீதக் கலைஞர்கள் இலங்கைக்குச் சென்று வந்ததை யாரும் தவறாகக் கருதவில்லை. அப்படியிருக்கும் போது, யாருமே கேள்விப்படாத கால்பந்து அணிக்கு மட்டும் ஏன் இத்தகைய எதிர்வினை?

இத்தகைய தேவையற்ற எதிர்வினைகளால் நாம் இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் ஒரு சேரத் துன்பத்தைக் கூட்டிக் கொண்டிருக்கிறோம் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.



இலங்கை இராணுவத்தினருக்கு தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்க வேண்டாம் என்று கேட்கிறோம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் எங்குமே பயிற்சி அளிக்கக் கூடாது என்கிறோம். இதனால் நாம் பெறும் பயன் என்ன? ஒன்றுமில்லை. தமிழக மீனவர்களைத் தாக்கத்தான் இந்தப் பயிற்சி பயன்படும் என்று இங்குள்ள சில சிறிய அமைப்புகள் சொல்கின்றன. நாம் வேண்டாம் என்று சொன்னால், இலங்கை இராணுவ வீரர்கள், பீஜ்ஜிங் போவார்கள். இந்தியர்களைத் தாக்க மிகச் சிறப்பான பயிற்சியை சீனா வழங்கும். தமிழர்களை வெறியுடன் இலங்கை இராணுவம் தாக்கும். பரவாயில்லையா? இதுதான் நமது இராஜதந்திரமா?

இந்தியாவில் பயிற்சி அளிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு, பிறகு அவர்களுடன் எப்படி பேச்சு நடத்துவது? இராஜீக உறவுகளுக்கு என்ன அர்த்தம்? இலங்கைக் கடற்படை கைது செய்த தமிழக மீனவர்களை மீட்டுவர, விடுவித்துவர வேண்டுமானால் இலங்கையில் உள்ள இந்தியத் தூதர்தான் போய் நின்றாக வேண்டும். ஒரு இராணுவப் பயிற்சிக்கான இராஜீக உறவுகளைக் கூட சகித்துக்கொள்ள முடியாவிட்டால், இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்சினைக்கும் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினைக்கும் எவ்வாறு தீர்வு காண்பது?

இலங்கையுடன் அனைத்து உறவுகளையும் துண்டித்துக் கொள்வது என்பது சாத்தியமே இல்லை. எல்லையில் சுரங்கப்பாதை அமைத்தும், கடல் வழியாக தீவிரவாதிகளை நமது எல்லைக்குள் நுழைத்தும், இணையத்தின் வழியாகப் பீதியையும் கிளப்பும் பாகிஸ்தானிடம்கூட இந்தியா நட்புடன்தான் இருந்தாக வேண்டும்.

அருணாசலப் பிரதேசம் எங்களுக்குத்தான் சொந்தம் என்று சொல்லிக்கொண்டிருக்கும் சீனாவுடன் இந்தியா அடுத்த ஆண்டு கூட்டு இராணுவப் பயிற்சி நடத்தவுள்ளது. இராஜீக உறவுகளைத் தக்கவைக்க இதைச் செய்தாக வேண்டியுள்ளது. அதே நிலைமைதான் இலங்கை அரசுடனான இந்திய அரசின் உறவும். இவை இராஜீக உறவுகள். இதை உணர்வுபூர்வமாகப் பார்ப்பது தவறு.

ராஜபக்ஷ குடும்பத்தினர் திருப்பதி கோயிலுக்கு வந்தால், அவர்களை அனுமதித்த ஆந்திர அரசு மீது நாம் ஆத்திரப்படவா முடியும்? ராஜபக்ஷ உறவுகள் இங்கே இராமநாதபுரம் வந்தாலும் பாதுகாப்புடன் தரிசனம் செய்ய அனுமதிப்பதுதானே பண்பாடு. அதுதானே இராஜீக உறவுகளை மேம்படுத்தும் வழிமுறை.

இராணுவப் பயிற்சிக்கு எதிர்ப்பு என்பது ஒருபுறம் இருக்கட்டும். திருச்சி, கலைக்காவிரி கல்லூரியில் நடனத்துக்காக வந்த இலங்கை மாணவர்களைத் திரும்பிப் போ என்று ஓர் அமைப்பு குரல் கொடுக்கிறது. பூண்டி மாதா-கோவில் விழாவுக்கு வந்த சிங்களவர்கள் வெளியேற வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்கிறது.

அப்படியானால் இலங்கைத் தமிழரைத் தவிர வேறு யாரும் இலங்கையிலிருந்து தமிழ் நாட்டுக்கு வரக்கூடாதா? பயிற்சிக்காக இலங்கை மருத்துவர்கள் இங்கே வரக்கூடாது. சிகிச்சைக்காக சிங்களத்தவர் வரக்கூடாது. படிப்புக்காக மாணவர்கள் வரக்கூடாது. விளையாட வரக்கூடாது. சாமி கும்பிட வரக்கூடாது. புத்தகயாவில் சிங்களவர் நுழையத் தடை விதிக்க வேண்டும். ஆனால், ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் சிங்கள அதிகாரிகளும் பாதுகாப்புடன் வந்து செல்லலாம், அப்படித்தானே?

நாம் திருப்பி அனுப்பினால் அவர்கள் திருப்பி அடிப்பார்கள். அடிவாங்கப் போவது இங்கே ஆர்ப்பாட்டம் நடத்தும் சிறு அமைப்புகளோ அல்லது அரசியல் தலைவர்களோ அல்ல, சாதாரண இலங்கைத் தமிழரும், தமிழக மீனவனும் தான் என்பதை மறந்துவிடக்கூடாது.

சர்வதேச அரசியலில் உணர்ச்சிக்கு இடமில்லை. நிதானமாகச் செயற்பட்டு நமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். ராஜபக்ஷவுக்குத் தெரிந்திருக்கும் இந்த உண்மை நமக்குத் தெரியாமல் இருப்பது ஏன்? இன்றைய தேவை, நிதானம். ஆத்திரமும், அவசரமும், அரசியலும் அல்ல!

**- தினமணி தலையங்கத்திலிருந்து.**

---

# இரும்பு ஏன் அழுதது?


உலோகங்களில் உயர்ந்ததான தங்கத்திற்கு உலகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டானது.

ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டே வந்தது.

ஒரு இடத்தில் யாரோ பெருமூச்சு விட்டு அழும் குரல் கேட்டது.

யார் அழுகிறார் என்று பார்க்கும் நோக்கத்துடன் அழுகுரல் வந்த திசையை நோக்கிச் சென்றது.

அங்கே கொல்லனுடைய உலைக்களம் இருந்தது. அங்கு இரும்புத் துண்டு ஒன்றை சம்மட்டியால் அடித்துக் கொண்டிருந்தார்கள்.



வேதனை தாங்க முடியாமல் அந்த இரும்புத் துண்டு அழுது புலம்பிக் கொண்டிருந்தது.

அதை அன்புடன் பார்த்த தங்கம், "இரும்பே அனைத்து உலோகங்களும் உன்னைப் போல் அடிபடப் பிறந்தவைகள்தான். இப்படி அழுது புலம்புவதால் என்ன பயன்? நானும் உன்னைப் போல் அடி வாங்குகிறேன். எனவே வேதனையைப் பொறுத்துக் கொள். அழாமல் இருக்கப் பழகிக் கொள்" என்றது.

அதைக் கேட்ட இரும்பு, "தங்கமே, உனக்குக் கிடைக்கும் தண்டனை வேறு, எனக்குக் கிடைக்கும் தண்டனை வேறு. நீ பொறுத்துக் கொண்டு அமைதியாக இருக்கலாம். என்னால் அப்படி இருக்க முடியாது" என்றது.

உடனே தங்கம் "நானும் உன்னைப் போல்தான் அடி வாங்குகிறேன். இருவர் தண்டனையும் வேறு என்று எப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டது.

"தங்கமே, உன்னை, உன்னைப் போன்ற தங்கமா அடித்துத் துன்புறுத்துகிறது? நமக்கு வேண்டாதவர்கள், பகைவர்கள் துன்புறுத்தும் போது தாங்கிக் கொள்ளலாம். என் நிலையைப் பார். என்னைப் போன்று இன்னொரு இரும்பு அல்லவா என்னைத் துன்புறுத்துகிறது. இதை என்னால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?" என்றபடி மீண்டும் கண்ணீர்விட்டது.

---

# கிட்டப்பாவின் பாட்டு



எஸ்.ஜி.கிட்டப்பா, ஆகஸ்ட் 25,1906 இல் பிறந்தார். பெற்றோர் மீனாக்ஷி - கங்காதர அய்யர். ராமகிருஷ்ணன் என்பது இயற் பெயர். வீட்டில் செல்லமாகக் கிட்டன். வெளியுலகில் கிட்டப்பா... கே.பி.சுந்தராம்பாளின் பாட்டைக் கேட்டுத் தன் துணைவி ஆக்கிக் கொண்டார்.

ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் "எவரனி" (தியாகராஜ கீர்த்தனை - தேவாம்ருத வர்ஷிணி ராகம்) பாடலைப் பாடி இசைத் தட்டில் பதிவு செய்தார். ஒருசமயம் கிட்டப்பா பாடிய எவரனியைக் கேட்டார். உடனே தாம் பாடியதற்கான பணத்தைத் திருப்பிக் கொடுத்து அது வெளிவராமல் தடுத்தார்.

கிட்டப்பா ஒருமுறை ஒரு பாடலைக் கேட்டால் உடனே திருப்பிப் பாடுவார். பியாரே ஸாஹேப் பாடிய கமாஸ் ராகப் பாடலைக் கேட்டார். அன்றைய தினம் நடைபெற்ற நாடகத்தில் அதை அப்படியே பாடினார். அதைக் கேட்டவுடன் பியாரே ஸாஹேப் ஒரு தங்கச் சங்கிலியைப் பரிசாக அளித்தார்.

அதேபோன்று இன்னொரு சம்பவம். "ஜானகிரமண" (தியாகராஜ கீர்த்தனை - சுத்த சீமந்தினி) கிட்டப்பா பாடியதைக் கேட்ட வயலின் மேதை கோவிந்தசாமிப்பிள்ளை ஒரு தங்கப் பதக்கத்தைப் பரிசளித்தார்.

இவர் பாடிய பேகடா ராகத்தை விஷ்ணு திகம்பர் மிகவும் பாராட்டினார். இணையற்ற கலைஞர் 27 வயது வரைதான் வாழ்ந்தார். மறைவு டிசம்பர் 2, 1933.

**- 'நெல்லை தந்த இசைமணிகள்' நூலில்**

---

# பூட்டுக்காக விட்ட சவால்!

தமது 36ஆவது வயதில், 225 ஆண்டுகளுக்கும் முன்னதாக ஒரு பூட்டை உருவாக்கி அதைத் திறப்பவர்களுக்குப் பல்லாயிரம் பரிசும் அறிவித்து அசத்தினார் அந்த அறிஞர்!

இங்கிலாந்திலுள்ள யார்க்சையரில் 1748 இல் பிறந்தார் அவர். தனது தந்தையின் பண்ணையில் வேலை பார்த்தார். 16ஆவது வயதில் தற்செயலாகக் காலில்பட்ட காயத்தினால் உள்ளூர் தச்சரிடம் பயிற்சி பெற்றார். பின்னர் சொந்தமாக லண்டனில் பெட்டி தயாரிப்பில் ஈடுபட்டார்.

இவரின் கண்டுபிடிப்பு, உரிமைப் பத்திரங்கள் சுமார் 18இல் பியர் பம்ப், ரூபாத்தாளில் இலக்கம் போடும் இயந்திரம், மரக்கடைசல் இயந்திரம், புதிய வகைக் கழிப்பறை என்பன அடங்கும். தமது 47ஆவது வயதில் ஹைட்ரோலிக் அழுத்தியைக் கண்டுபிடித்தார். அவர்தான் அறிஞர் ஜோஸப் பிராமா.

குறுகிய அளவிலான உருளையில் உள்ள த[…] அழுத்தினால் உள்ளிருக்கும் தண்ணீர் பெரிய அ[…] உருளையை அழுத்தித் தூக்கும் என்பதே அந்த […] தற்சமயம் தண்ணீருக்குப் பதிலாக எண்ணெய் வகைகள் பயன்படுகின்றன.

அன்று விளம்பரம் பெற்றது அவர் கண்டுபிடித்த பூட்டினால்தான். பூட்டைத் திறப்போருக்கு 2000 பவுண்ஸ் பரிசு என அறிவித்தார். அந்தப் பரிசுத் தொகையை 1851 வரை 67 ஆண்டுகளாக யாராலும் பெற முடியவில்லை. 1851 ஆம் ஆண்டில் ஓர் அமெரிக்க மெக்கானிக் 16 நாள்கள் இடைவெளியில் 50 மணி நேரம் போராடி அந்தப் பூட்டைத் திறந்தார்.

அந்தப் பூட்டை வடிவமைத்தவரான ஜோஸப் பிராமா, 1814ஆம் ஆண்டில் தான் செய்த ஓர் இயந்திரம் மூலம் சில காட்டுமரங்களை வெட்டி[…] சாய்ப்பதில் ஈடுபட்டபோது, குளிர் காய்ச்சல் வந்[…] இறந்துவிட்டார். அவர் இறந்து 37 ஆண்டுகளுக்[…] பிறகுதான் பூட்டு திறக்கப்பட்டது.

# முகப் பொலிவுக்கு...



☞ ஒரு தேக்கரண்டி கசகசாவைத் தண்ணீருடன் சேர்த்து, அரைத்து முகத்தில் பூசி 30 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவி வந்தால் முகம் "பளிச்" என்று இருக்கும்.

☞ வெள்ளரிக்காயை மிக்சியில் அடித்து, அதை முகத்தில் தடவி ஒரு மணி நேரம் கழித்து முகம் கழுவினால் முகம் பளபளப்பாக இருக்கும்.

☞ புதினா இலைச்சாறு, எலுமிச்சைச்சாறு ஆகியவற்றை வெந்நீரில் கலந்து வாரம் இருமுறை ஆவி பிடித்து வந்தால் முகம் வசீகரமாகும்.

☞ இரவில் படுக்கும் முன் பாலாடையை மஞ்சள் கலந்து முகத்தில் தடவிவிட்டு ஒரு மணி நேரம் கழித்து! முகத்தைக் கழுவினால் முக்ம் மிகுந்த வனப்புடன் இருக்கும்.

☞ எலுமிச்சை சாறில் பாசிப்பயறு மாவை கலந்து முகத்தில் தடவி வைத்து ஒரு மணி நேரம் கழித்து முகம் கழுவினால் முகம் பொலிவு பெறும்.

# குருநாதர்



கண்ணதாசன் தமிழ் வித்வான் பரீட்சையில், நுழைவுப் பரீட்சைக்குப் படிப்பதற்காக, கம்பராமாயணத்தில் 100 பாடல்களும், அகநானூறில் 16 பாடல்களும், புறநானூறில் 16 பாடல்களும் மனப்பாடம் செய்தவர்.

பின், கவிதைகளைப் படிப்பதே பொழுது போக்காகி, கண்ணில் படும் பாடல்களை எல்லாம் மனப்பாடம் செய்யத் தொடங்கினார். பிற்காலத்தில், அவர் கவிஞராவதற்கு வேண்டிய அஸ்திவாரம் இவ்வாறு 16 ஆவது வயதிலேயே அவருக்கு ஏற்பட்டது.

சொந்த ஊரா்கிய சிறுகூடல் பட்டியில், அவர் அனுபவித்த தனிமையும், உணர்ச்சிகளும், வாழ்க்கையில் நடந்த காதல் நிகழ்ச்சியும், அதில் ஏற்பட்ட தோல்வியும்தான் அவரது கவி உள்ளத்துக்குக் காரணங்கள்.

காதல் தோல்விக்குப் பின், அவர் ஊரை விட்டுப் புறப்பட்டு, ராமச்சந்திரபுரம் சென்று, "திருமகள்" என்ற பத்திரிகையின் ஆசிரியரானார்.

இவர், தன் பெற்றோரின் எட்டாவது பிள்ளையாகப் பிறந்ததால், (தேவகியின் எட்டாவது குழந்தையாகப் பிறந்த) கண்ணனின் நினைவாக, "கண்ணதாசன்" என்று பெயர் வைத்துக் கொண்டார். அப்போது கம்பதாசன், பாரதிதாசன் ஆகிய பிரபல கவிஞர்கள் இருந்தனர் அந்தப் பாதிப்பு!

1944இல் தான், முதல் கவிதை எழுதினார் "அவள் கடிதம்" என்பது அதன் தலைப்பு. பின், ஆறு வருட காலம் கவிதைகளே எழுதவில்லை கவிதைகளுக்கு பத்திரிகை உலகில் வரவேற்பு இல்லாததால்!

சில கேலிப் பாடல்களை எழுதி வந்தார். இரண்டொரு சினிமாப் படங்களுக்கு மட்டும், பாட்டு எழுதிக் கொடுத்தார். ஆனால், அப்போதெல்லாம், படங்களில் கண்ணதாசனின் பெயர் வெளியிடப்படவில்லை. 1949இல், "கன்னியின் காதலி" என்ற படத்திற்கு பாட்டு எழுதிய போதுதான், முதன்முதலில் அவர் பெயர், திரையில் போடப்பட்டது.

**'என் குருநாதர் கண்ணதாசன்' கட்டுரையில்,**
**பஞ்சு அருணாசலம்.**

# கொள்கைக்காக ஹொலிவுட்டைத் துறந்தவர்



பிரச்சினைக்குரிய திரைப் படங்களை சுதந்திரமாகவும் சுய சிந்தனையுடனும் இயக்கியதற்கு தான் பார்த்த மோசமான படங்கள்தாம் காரணமென்று கூறியவர் ஸ்டான்லி கூப்ரிக். இவரது 47 ஆண்டு கால திரையுலக வாழ்க்கையில் 16 படங்களை மட்டுமே இயக்கி உலகப் புகழ் பெற்றது சாதனையாகக் கருதப்படுகிறது.

நியூயோர்க் நகரத்தில் பிறந்த கூப்ரிக்,




தனது 22ஆவது வயதில் தன் கையிலிருந்த சொற்ப பணத்தை வைத்து Day of the Fight என்ற குறும் படமொன்றை 16 நிமிடங்கள் ஓடும் வகையில் தயாரித்தார். உறவினர்களிடம் 13 ஆயிரம் டொலர் கடன் வாங்கி 1953 ஆம் ஆண்டு Fear and Desire என்ற முழு நீளப் படத்தைத் தயாரித்தார்.

கேர்க் டக்ளஸுடன் இணைந்து Paths of Glory (1957), "ஸ்பார்ட்டகஸ்" (1959) ஆகிய இருபடங்களைத் தயாரித்து இயக்கினார். இதில் "ஸ்பார்ட்டகஸ்" படத்தை முதலில் இயக்கிய அந்தோனி மான் நீக்கப்பட்டு பின்னர் கூப்ரிக்கிடம் இயக்கும் பொறுப்பை கேர்க் டக்ளஸ் ஒப்படைத்தார். இருபடங்களுமே மாபெரும் வெற்றிப் படங்களாக அமைந்தன.

படத்தயாரிப்பின்போது நட்சத்திரங்கள் குறுக்கிடுவதை இவர் விரும்பியதில்லை. படத்தைத் தொடங்கி முடிக்கும் வரை அனைத்துமே தன்னுடைய கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென்று விரும்பினார். 1958ஆம் ஆண்டு மார்லன் பிராண்டோவுடன் One-Eyed Jacks என்ற படத்தில் இணைந்தாலும் இருவருக்கும் ஒத்துவராததால் இவர் விலக, மார்லன் பிராண்டோவே அப்படத்தை இயக்கி வெளியிட வேண்டியதாயிற்று. சிறுவயதில் ஏற்பட்ட இலக்கிய ஆர்வத்தால் தான் படித்த நாவல்களையே திரைப்படங்களாக உருவாக்கினார். 1962 ஆம் ஆண்டு விளாடிமிர் நபகோவின் நாவலான "லோலிடா"வை படமாக்கும்போது, ஒரு நடுத்தர வயது மனிதன் தன் வளர்ப்பு மகளையே காதலிப்பதாக கூறப்பட்ட கதையை அமெரிக்க அரசியல் சட்டம் ஒப்புக் கொள்ளாததால், தன் கொள்கையை விட மறுத்த கூப்ரிக், ஹொலி வுட்டை விட்டு வெளியேறி பிரிட்டனில் தங்குவதென தீர்மானித்தார். பின்னர் அந்தப் படத்தை பிரிட்டனிலேயே தயாரித்து முடித்தார்.

விஞ்ஞான வளர்ச்சி மனிதனையே அழிக்கவல்லது என்பதை நிரூபிக்க 2001: A Space Odyssey (1968) என்ற படத்தை இயக்கியபோது ஆர்தர் சி.கிளார்க்கை திரைக் கதை அமைக்க அமர்த்திக் கொண்டார். இப்படத்தை இயக்கியதற்காக முதலாவது ஒஸ்கார் விருதைப் பெற்றார். அந்தோனி பேர்கெஸ் நாவலான A Clockwork Orange (1971) வெளியாகி பிரிட்டனில் 61 வாரங்கள் ஓடிய நிலையில், படத்தில் இடம் பெற்ற காட்சிகளால் எழுந்த பிரச்சினையில் அவரே அந்த படத்தைத் திரும்பப் பெற்றார். இருப்பினும் இத்திரைப்படத்திற்கு மூன்று ஒஸ்கார் விருதுகள் கிடைத்தன. 18 ஆம் நூற்றாண்டு குழப்பங்களை விளக்கும் தாக்கரேயின் நாவலை அடிப்படையாக வைத்து கூப்ரிக் இயக்கிய Barry Lyndon (1975) ஏழு ஒஸ்கார் விருதுகளைப் பெற்றது. போரினால் ஏற்படும் பயங்கர விளைவுகளையும் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதையும் அடிப்படையாக வைத்து Full Metal Jacket (1987) படத்தை இயக்கினார். வியட்நாம் போரை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட படமென்றாலும் இது முழுக்க முழுக்க பிரிட்டனிலேயே எடுக்கப்பட்டது. ஓர் ஒஸ்கார் விருதைப் பெற்றது. அதே ஆண்டில் வெளியான Platoon திரைப்படம் பல விருதுகளைப் பெற்றது.




கூப்ரிக் படங்களில் உலகுக்குத் தேவையான ஒரு தகவல் நிச்சயம் இருக்கும். இவர் தேர்ந்தெடுக்கும் கதைப்பொருள் வலுவில்லாத தேவையற்ற கருத்துக்கள் என்று விமர்சித்தவர்களும் உண்டு. ஆனால் அவர் யாருடனும் சமரசம் செய்து கொள்ளமாட்டார். அவரது படங்கள் உலகத்தரம் வாய்ந்த பட வரிசையில் இடம் பெற்றதற்கு இந்தப் பிடிவாதமும் ஒரு காரணமாகும்.

1995 ஆம் ஆண்டு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஆஸ்திரிய நாவலாசிரியர் ஆர்தர் ஸினிட்ஸ்வர் எழுதிய "ட்ரீம் ஸ்டோரி"யை அடிப்படையாக வைத்து ரொம் க்ரூஸ், நிக்கோல் கிட்மென் நடிப்பில், ice white shut என்ற படத்தைத் தொடங்கினார். படமாக்குவதையும் கதை என்ன என்பதையும் இரகசியமாகவே வைத்திருந்தார். இத்திரைப்படத்திற்காக ரொம் க்ரூஸ், நிக்கோல் கிட்மென் இருவரும் தொடர்ந்து 15 மாதங்கள் லண்டனில் தங்கியிருந்தனர். படம் தனக்கு திருப்திகரமாக இல்லையென்றால் திரையிடக் கூடாது என்ற நிபந்தனையுடன் தயாரிப்பு செலவுக்காக 60 மில்லியன் டொலர் பெற்றார். ஆனால் படம் முடிவடைந்தவுடன் எதிர்பாராத விதமாக 1999 ஆம் ஆண்டு 70 வயதில் மரணமடைந்தார்.

1997 ஆம் ஆண்டில் டைரக்டர்ஸ் கில்ட் ஒ.்.ப் அமெரிக்கா வழங்கும் உயரிய விருதான டி.டபிள்யூ. கிரி.். பித் விருது வழங்கப்பட்டபோது கூப்ரிக் கூறினார், "ஒரு பொழுதுபோக்கு பூங்காவில் அமர்ந்து "வோர் அன்ட் பீஸ்" போன்ற நாவலை தன்னாலும் எழுத முடியுமென்று நம்புகிறவன், எவ்வித அனுபவமும் இன்றி ஒரு படத்தை இயக்க முயற்சித்து வெற்றி பெற்றுவிட்டால் அது போன்ற மகிழ்ச்சி அவனது வாழ்க்கையில் எதுவுமே இல்லை."

...ருளையில் உள்ள தண்ணீரை
...ம் தண்ணீர் பெரிய அளவிலான
...க்கும் என்பதே அந்த விதி.
...பதிலாக எண்ணெய்
...றது அவர்
...ன். பூட்டைத்
...ர்ஸ் பரிசு என
...த் தொகையை
...க யாராலும்
... ஆம் ஆண்டில்
... 16 நாள்கள்
...நேரம் போராடி
...மத்தவரான ஜோஸப்
...ல் தான் செய்த ஓர்
...ட்டுமரங்களை வெட்டிச்
... குளிர் காய்ச்சல் வந்து
...ந்து 37 ஆண்டுகளுக்குப்
...பட்டது.




# ஐ-போன் பயனர் இரகசியங்கள் இன்டர்நெட்டில்!

அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான FBI இயில் வேலை பார்க்கும் அதிகாரி ஒருவரின் லப்டொப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த 1.23 கோடி அப்பிள் ஐ-போன், ஐ-பாட் விவரங்களை திருடி, ஆன்டிசெக் என்ற குழு, இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. அமெரிக்காவில் கடந்த செவ்வாயன்று இணையதளத்தை திறந்து பார்த்தவர்களுக்கு, அதிர்ச்சி தரும் செய்தி காத்திருந்தது.

ஹேக்கர்கள் எனப்படும் கம்ப்யூட்டரில் வைரசை பரப்பி இணையதளங்களை முடக்குவது, தகவல்களை திருடுவது போன்ற வேலைகளை செய்யும் 'ஆன்டிசெக்' என்ற குழு அமெரிக்க புலனாய்வு அமைப்பான எவ்.பி.ஐ.யின் கம்ப்யூட்டரில் இருந்து ஒரு கோடி 23 இலட்சத்து 67,232 அப்பிள் ஐபோன் மற்றும் ஐபாட்களின் யூடிஐடி, அவற்றின் உரிமையாளர் பெயர், கருவியின் பெயர், அது எந்த வகையைச் சேர்ந்தது, ஸிப் கோட், செல் போன் நம்பர்கள், முகவரிகள் என சகலவித விவரங்களையும் திருடி இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.

ஐபோன் மற்றும் ஐபாட் வைத்துள்ளவர்கள் அவசர, அவசரமாக தங்களுடைய விவரங்களும் இடம் பெற்றுள்ளனவா என்று இணையதளத்தில் சரிபார்த்தபோது, அவர்களுக்கு அதிர்ச்சிதான் காத்திருந்தது. ஏனெனில், கனகச்சிதமாக அனைத்து தகவல்களும் இடம்பெற்றிருந்தன. ஐபோனில் வாடிக்கையாளர்கள் என்னென்ன விவரங்களை பார்க்கிறார்கள், எவற்றை சேகரித்து வைத்துள்ளார்கள் போன்ற விவரங்கள் அனைத்தும் அதில் இடம்பெற்றிருந்தன.



இந்தச் செய்தி காட்டுத்தீ போல பலருக்கும் பரவியது. எவ்.பி.ஐ.யில் பணியாற்றும் கண்காணிப்பு முகவர் கிறிஸ்டோபர் கே ஸ்டாங்கி என்பவரின் லப்டொப்பில் இருந்துதான் இந்த தகவல்கள் திருடப்பட்டுள்ளது என்று தெரிய வந்துள்ளது.

ஆனால், எவ்.பி.ஐ. நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அப்படி எந்த திருட்டும் நடக்கவில்லை என்று தெரிவித்துள்ளது.

தகவல்களை திருடி வெளியிட்டுள்ள ஆன்டிசெக் குழு, தன்னுடைய தகவலில் தெரிவித்துள்ள அதிர்ச்சியூட்டும் விஷயம், 'நாங்களாவது சும்மா திருடி தகவல்களை வெளியிட்டோம். ஆனால், அப்பிள் போன் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களைக் கண்காணிப்பதற்காக அவர்களின் தகவல்களனைத்தையும் எவ்.பி.ஐ. திரட்டுகிறது' என்பதை உலகுக்கு வெளிப்படுத்தவே இதைச் செய்தோம் என்றுள்ளனர்.




## எமது பாடசாலை பற்றி...



இயற்கையின் கொடைகளால் வனப்போடு மிளிர்கின்ற ஈழத்திருநாட்டின் வடமாநிலத்தின் பருத்தி நகரில், சான்றோர் பலரை உருவாக்குகின்ற தும்பளைக் கிராமத்தில், சமூக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் பக்தி நெறிசார்ந்த வாழ்வியல் அம்சங்களோடு சங்கமிக்கின்ற வாழ்வியலாதாரங்களில் பழமையான சமூகப் பின்னணியின் பலத்தோடு, உயர் திரு. சிதம்பரப்பிள்ளை அவர்களது குடும்பத்தினரின் உதவிகளோடு 1936 ஆம் ஆண்டு விஜயதசமியன்று ஆரம்பமானதுதான் இன்று தோற்றப் பொலிவோடு நிமிந்து நிற்கும் யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்:

இம்மகாவித்தியாலயம் பிள்ளைநேயப் பாடசாலையாகவும் மிளிர்கின்றது. PSI நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கௌரவ ஆளுநர் அவர்களது பாராட்டுச்சான்றிதழைப் பெற்றிருக்கின்றது. நாட்டின் அனர்த்த காலத்தில் நிறுத்தப்பட்டிருந்த க.பொ.த. உயர்தர கலை வகுப்புக்கள் மீண்டும் இந்த ஆண்டில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியால் 29 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டதுடன், மாணவர்களுக்கான பிரார்த்தனை மண்டபமும் அமைத்துக் கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.


பாடசாலை பாண்ட் இசைக்குழுவினர்

மேலும் இப்பாடசாலையில் ஏறத்தாழ 826 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். 40 ஆசிரியர்கள் மாணவர்களுக்கான சேவையை ஆற்றி வருகின்றனர்.

### பாடசாலை எதிர்நோக்குகின்ற பலவீனங்கள்.

1) பெரும்பாலான மாணவர்கள் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களைச் சார்ந்திருத்தல்.

2) தரம் 5 புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த (சா/த) பரீட்சையில் சிறந்த புள்ளி பெற்ற மாணவர்கள் கல்லூரிகளில் நாட்டம் கொள்கின்றமை.

3) சமய நிகழ்வுகள், விழாக்கள் நடாத்துவதற்கான ஒரு ஒன்றுகூடல் மண்டபம் இல்லாமை ஆகிய விடங்களைச் சுட்டுதல் பொருத்தமானதே.


பாடசாலை ஆசிரியர் குழாம்


பாடசாலை உயர்தர மாணவர் ஒன்றியம்

## அதிபர் க.க. யோகநாதன்



இப்பாடசாலையில் 9ஆவது அதிபராகப் பதினைந்து ஆண்டுகள் கடமையாற்றிப் பாடசாலையின் பெயரை மிளிர வைத்த அமரர் மணியம் கணபதிப்பிள்ளைஅவர்களின் திடீர் மறைவின்பின்னர் பாடசாலை சிறகொடிந்த பறவையாக சோகத்தில் ஆழ்ந்தவேளை - வலயக்கல்விப் பணிமனையின் தீர்மானத்திற்கு அமைவாக 2007-07.18 ஆம் திகதியன்று அதிபராக கடமை ஏற்றர். இவர் ஒரு சிறந்த கல்விமானாகவும் சமூக சேவையாளரும் ஆகக் காணப்படுவார். மாணவர்களின் கல்வியில் மட்டும் அன்றி சமூக, சமய பழக்க வழக்கங்களையும் கண்காணித்து வருகின்றார். அதிபர் பதவியேற்ற காலத்திலிருந்து கோட்டம், வலயம், மாகாணம் வரை மாணவர்கள் போட்டிகளில் வெற்றியீட்டி தேசிய மட்டத்திலும் பரிசில்களைத் தட்டிச் சென்றுள்ளனர். இவ் அதிபர் காலத்தில் நிகழ்ந்த தேசியமட்ட சாதனைகள்: All Island Nano Science Competition இன் சுவேன்ஸ் ஜெனஸ்ரீன் முதலாம் இடத்தை பெற்றார்.

இராகவன் துளசிகா ஆங்கில எழுத்தறிவுப் போட்டியில் பங்கு பற்றி 3ஆம் இடத்தைப் பெற்றார்.

# யாழ். பிரதேச அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)


2012ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர். சில்வேஸ்திரி அலென்ரின், ஆகியோர் பிரதேச செயலக ரீதியாக அபிவிருத்தி திட்டங்களுக்காக தமது நிதியிலிருந்து ஒரு தொகை நிதியை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இதன்படி யாழ். பிரதேச செயலர் பிரிவில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 9 இலட்சத்து 55 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

கொழும்புத்துறை சென்மேரீஸ் மாதர் சங்கத்திற்கு தையல் இயந்திரக்கொள்வனவுக்கென 50ஆயிரம் ரூபாவும், பாசையூர் மாதர் சங்கத்திற்கு தையல் இயந்திரக்கொள்வனவுக் கென 50ஆயிரம் ரூபாவும், கண்ணாபுரம் சங்கத்திற்கு தையல் இயந்திரக் கொள்வனவுக்கென 50ஆயிரம் ரூபாவும், அத்தியடி மாதர் சங்கத்திற்கு தையல் இயந்திரக் கொள்வனவுக்கென 50ஆயிரம் ரூபாவும், கொழும்புத்துறை கிழக்கு மாதர் சங்கத்திற்கு தையல் இயந்திரக் கொள்வனவுக்கென 50ஆயிரம் ரூபாவும்,கொட்டடி மீனாட்சி அம்மன் கோவில் மாதர் சங்கத்திற்கு தையல் இயந்திரக் கொள்வனவுக்கென 50ஆயிரம் ரூபாவும், ஞானக்குழந்தை இல்லம் நாவலர் பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும்,கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்தியக்கொள்வனவுக்கு 1 இலட்சத்து 20ஆயிரம் ரூபாவும், யாழ். சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரிக்கு திரைச்சீலை கொள்வனவுக்கு 1இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், யாழ்.சென் பற்றிக் கல்லூரிக்கு ஒலிபெருக்கி, மற்றும் மைக்செற் கொள்வனவுக்கு 1இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயத்திள் கூரைத் திருத்தத்திற்கு 2 இலட்சத்து 60 ஆ'பிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# சேவை மனப்பாங்குடன் அலுவலர்கள் பணியாற்ற வேண்டும்

(யாழ்ப்பாணம்)



சேவை மனப்பாங்குடன் மக்களுக்காக பணியாற்றும் அரச உத்தியோகத்தர்களின் சிறந்த சேவையினை, அவர்கள் சேவையாற்றி, இடமாற்றம் பெற்றுச் செல்லும் காலத்தில் அப்பிரதேச மக்கள் இணைந்து அவர்களின் சேவையினைப் பாராட்டும் முகமாக மக்களால் முன்னெடுக்கப்படும் சேவை நலன் பாராட்டு விழா நிகழ்வின் மூலம் அவர்கள் மக்களுக்காற்றிய சேவையின் புனிதத் தன்மையினை உணர்ந்து கொள்ள முடியும்.

இவ்வாறு கடந்த செவ் வாய்கிழமை அளவெட்டி அறிவொளி சன சமூக நிலையத் தலைவர் ப.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற அளவெட்டி வடக்கு கிராம சேவகர் கந்தையா கணேசதாஸின் சேவை நலன் பாராட்டு விழா நிகழ்வில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அரசசேவையில் உள்ளவர்கள் மக்களின் நலன் முன் நிறுத்தியதாக அவர்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து சேவையாற்ற முன்வருவதுடன் கிராமசேவகர்கள், தாம் சேவையாற்றும் பிரதேச அபிவிருத்தி, மக்கள் நலன் போன்றவற்றினை முதன்மைப்படுத்தியாக தமது பணியினை சிறந்த முறையில் முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்ததுடன் இப்பிரதேச மக்களின் ஒன்றுபட்ட வளர்ச்சியினை கருத்தில் கொண்ட கிராமசேவகர் கணேசதாஸ் தமது பணி நிலைக்குள் உட்பட்டிருக்கும் அளவெட்டி வடக்குப் பிரதேசத்தின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு தமது சேவைக்கு அப்பாற்சென்று பணியாற்றியுள்ளமையை இப்பிரதேச மக்கள் இன்றைய தினம் முன்னெடுத்துள்ள சேவை நலன்பாராட்டு விழாவின் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளதாகத் தெரிவித்ததுடன் அளவெட்டி வடக்கு பிரதேச கிராம சேவகரின் சேவையினைப் பாராட்டி ஈ.பி.டி.பி அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) தன் சார்பிலும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சார்பிலும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் தெல்லிப்பளை பிரதேச செயலர் ஸ்ரீமோகன், யாழ். அருணோதயாக் கல்லூரி அதிபர் ந.ரவீந்திரன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி. வடக்கு அமைப்பாளர் ஜெயபாலசிங்கம் (அன்பு) உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# வாய்க்காலினுள் கழிவுகள் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

வெள்ளம் வழிந்தோடும் வாய்க்காலுள் கழிவுகள் கொட்டப்பட்டுள்ள செயற்பாடொன்று கைதடி - ஏ-9 வீதியில் இடம்பெற்றிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இச்சம்பவமானது கைதடி முதியோர் பராமரிப்பு நிலையமான சாந்தி நிலையத்திற்கு அருகாமையில் உள்ள 'அசெம்ளி ஒவ்கோட்' எனும் கிறிஸ்தவ சபைக்குரிய காணிக்கு முன்பாக இடம்பெற்றிருக்கிறது.

இச்செயற்பாடானது விசமிகளின் வேலையா, அன்றி குறிப்பிட்ட சிலர் தங்கள் காணிக்கு பாதை அமைக்கும் நோக்கில் கொண்டுவந்து போட்டார்களா என அவ்வீதியால் பயணிக்கும் பொது மக்கள் கேள்வி எழுப்புவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

இதேவேளை இனிவரும் காலம் மழை காலமாகையில், குறிப்பிட்ட வெள்ளம் வழிந்தோடும் வாய்க்காலினுள் இருக்கும் கழிவுகள் அகற்றப்படாத விடத்து, வெள்ளம் நிரம்பி அண்மையில் புதிதாக புனரமைப்புச் செய்யப்பட்டு, காபெற் இடப்பட்ட வீதியை அரித்துச் செல்லும் நிலை ஏற்படலாமென கைதடி வாழ் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (138)



சிறுப்பிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் விழாவின் போது முதன்மை மாணவனுக்கு பாடசாலையின் பிரதி அதிபர் சின்னம் சூட்டி கௌரவிப்பதையும், ஏனைய மாணவ தலைவர்கள் அதிபர், ஆசிரியர்களுடன் நிற்பதனையும் காணலாம். (03)

# பதிவிருக்கப் பெட்டகம்

வாழ்வில் பெரிய பிரச்சினை எதிரிகளுக்குப் பதில் சொல்வது இல்லை. சுற்றத்திடமும் நட்பிடமும்கூட எப்படி உறவாடுவது என்பதே. மற்றவர் மனம் கோணாமலும் சொல்ல வேண்டும் தன் கருத்தையும் சொல்ல வேண்டும் என்பது மீசைக்கும் கூழுக்கும் ஆசைப்படுவது மாதிரிதான். இதனாலேயே பல நேரங்களில் நாம் மவுனமாகவும் அல்லது வார்த்தைகளின் வீரியத்தையோ கருத்தின் வீரியத்தையோ குறைத்துப் பேசியும் சமரசம் செய்து கொள்கிறோம். இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் தான் நம்புவதைத் தைரியமாகச் சொல்லி விட்டுப் போகிறவர்கள் சொற்பமாக இருந்தாலும் அந்தக் குணத்துக்காகப் பாராட்டத்தக்கவர்கள்.

நாம் நினைக்கிற கருத்தை நாம் நினைக்கிற விதமாக அதே நேரத்தில் நாம் நம்முடைய கருத்தைச் சொல்கிறோம் என்று மற்றவர் நினைக்கிற அளவுக்கு இதமாக எடுத்துச் சொல்கிற ஆசை எல்லாருக்கும் இருக்கிறது. ஆனால், மெத்தப் படித்த சான்றோரும் சாதனைகள் புரிந்த கலைஞர்களில் பலருமேகூட விமர்சனங்களையும் கருத்துகளை யும் தனிப்பட்டவிதமாக எடுத்துக் கொண்டு சுருங்கிப் போகிற அல்லது எதிர்வினை புரிகிற சமுதாயத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், நம் சுற்றத்திடமும் நட்பிடமும் அன்பு என்கிற பெயரிலும் நட்பு என்கிற பெயரிலும் நாம் மாட்டிக் கொள்கிற விலங்குகள் சொல்ல விரும்புவதைச் சொல்லவிடாமல் செய்துவிடுகின்றன. நம் கருத்துகளை நாம் அன்பு செலுத்துவோர் உட்பட நம்மைத் தவறாகப் புரிந்து கொள்ளாதபடிக்கு எடுத்துச் சொல்வது எப்படி என்கிற கேள்வியை எழுப்புவதன் மூலம், அப்படி எடுத்துச் சொல்கிற சாத்தியங்கள் குறைந்துபோன வாழ்க்கையை நாம் கைக் கொண்டிருக்கிறோம். – பி.கே.சிவகுமார்

நம்மிடமிருந்து நமக்குக் கிடைக்கும் ஆனந்தத்திற்கு அடுத்தபடியாக நமக்கு அதிக ஆனந்தம் தரும் விஷயம் அடுத்தவர்களுக்கு, அவர்களிடமிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் சந்தோஷத்தைக் கிடைக்கவிடாமல் செய்வது. பொதுவாக இது, அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் வழி நடந்தேறுவது. அதிகாரததின் மீதான அளப்பரிய ஆசை என்பது தூய்மைவாதிகள் எதிர்த்துவரும் மதுவருந்தும் வேட்கை மற்றும் அத்தகைய பிற வேறு தீங்குகளை விட பன்மடங்கு தீமை பயப்பது. ஒழுக்கமான மனிதர்களிடம் அதிகாரத்திற்கான ஆசை என்பது மற்றவர்களுக்கு நல்லது செய்யும் ஆசை என்பதான போர்வைக்குள் தன்னை ஒளித்துக்கொண்டு இருக்கிறது என்றாலும் அதன் சமூகரீதியான பாதிப்புகளைப் பொறுத்தவரை எந்த மாற்றமுமில்லை. – பெட்ரண்ட் ரஸ்ஸல்

அனைவரிடத்திலும் உள்ள பொதுமைக் கூறுகள் மீது ஈகோ 'ஒன்றுதல்' வைத்துக்கொள்வதன் வழியில்தான் குழுவினரிடையே இணக்கமும் இயைபும் ஏற்படுகின்றன. 'ஒன்றுதல்' குழுமக் கருத்தாக்கத்தை உருவாக்கிவிடுகிறது. இத்தகு ஒன்றுதலில் தன்மோகம் அடங்கியுள்ளது. அதனால் தான் குழுவினரிடம் தன்மோக ஒன்றுதல் இயல்பாக ஏற்படுகிறது. இதன் காரணமாக, குழுமத்தில் உள்ளவரை யாராவது ஊறு செய்தால், தன்னை ஊறு செய்ததுபோல் ஆத்திரம் அடைவதைக் காணலாம். இந்த உணர்வெழுக் கட்டுக் காரணமாக சண்டை, போர் ஆகியவை தோன்றுகின்றன. இவற்றைக் கொண்டுதான் சமூக நலனுக்கு என்று தனனலத்தைத் தியாகம் செய்ய வேண்டிய கடப்பாடு மனிதனுக்கு ஏற்படுகிறது. அதனால் சமூக மனிதனின் எதிர்காலம் கவலைக்கிடமாக உள்ளது என்கிறார் ஃப்ராய்ட். ஃப்ராய்டைப் பொறுத்தவரையில் குழும அமைப்புகள் எல்லாம் நோய்க் குறிகளே ஆகும். சாதி, சமயம், கட்சி, இனம், நாடு, மொழி சார்ந்த பற்றுகளில் நோய்க் குறி உள்ளது. – தி. கு. இரவிச்சந்திரன்

உலக அளவில் யாரெல்லாம் சமூகத்தை, அமைப்பை, நம்பிக்கைகளை மாற்ற முயல்கிறார்களோ, இருப்பின் வலியான, மையப் பொது யதார்த்தத்திலிருந்து முரண்பட்டு தம்மை உலகில் நிறைக்க முயல்கிறார்களே அவர்களில் செயல்படும் கூறு பரோனிய (Paranoia – தற்புனித பிரம்மை] மனநிலைதான். அந்த வகையில்தான் ஹிட்லர், காந்தியார் மட்டுமல்ல மார்க்ஸ், மாவோ, அம்பேத்கர், பெரியார், சே குவேரா என எந்த ஒரு நவீன வரலாற்றுப் பாத்திரத்திலும் பரோனிய கூறுகள் காணப்படுகின்றன. எந்த உறுதிப்பற்றும் பாசிசத்திற்கு அடிப்படையாக அமைய முடியும் என்பதுதான் நமது இன்றைய புரிதல். – பிரேம்

# வாழ்வெழுச்சித் திட்ட அடைவுமட்ட ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்வெழுச்சி திட்ட கண்காட்சி மூலமாக மாவட்டங்கள் தோறும் அதன் அடைவு மட்டங்கள் தொடர்பிலான கலந்து ரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்த ஏனைய நான்கு அமைச்சுக்களின் கீழான 16 நிறுவனங்களினதும் மாவட்ட ரீதியிலான அடைவு மட்டங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக வாழ்வெழுச்சித் திட்ட கண்காட்சிகள் நடாத்தப்பட்ட மாவட்டங்களில் கண்காட்சிகளின் பின்னர் தொழில்நுட்ப பயிற்சி, மூலப்பொருள் வழங்கல், வங்கிக்கடன் வழங்கல், சந்தை வாய்ப்பு மற்றும் பயனாளிகள் அடைந்துள்ள பெறுபேறுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதனிடையே எதிர்காலத்தில் குறித்த செயற்றிட்டங்களை மென்மேலும் விரிவாக்குவது மற்றும் மேம்படுத்துவது உள்ளிட்ட விடயங்களில் துறை சார்ந்த அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டுமென இதன்போது அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர ஜெகராசசிங்கம், வாழ்வெழுச்சித் திட்டப் பணிப்பாளர் கமகே ஆகியோர் உடனிருந்தனர்.

# செப்ரெம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவு

(அரியாலை)


செப்ரெம்பர் மாதத்துக்கான ஓய்வுதியக் கொடுப்பனவுகள் எதிர் வரும் திங்கட்கிழமை வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓய்வூதியம் பெறும் இளைப்பாறிய அரச மற்றும் ஊழியர்களுக்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் அவர்கள் ஓய்வூதியம் பெறும் பிரதேச செயலகங்களால் அனுப்பி வைக்கப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

இந்த வவுச்சர்கள் ஒரு மாதகாலத்திற்குச் செல்லுபடியாகுமெனினும் வேலைப்பழுவையும் காலதாமதத்தையும் தவிர்ப்பதற்காக குறித்த நாளில் சம்பந்தப்பட்டவர்கள் தாம் குறித்தொதுக்கியுள்ள வங்கிகள் மற்றும் தபால் நிலையங்களில் பெற்றுக் கொள்வது சாலவும் சிறப்பானதென யாழ்.மாவட்ட ஓய்வூதியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(23)

# தலையில் 2100 ஊசிகள் ஏற்றி மோகனதாஸ் கின்னஸ் சாதனை



கின்னஸ் வரலாற்றில் தனது சாதனையை மீண்டும் முறியடித்து புதிய சகாப்தத்தை உருவாக்கியுள்ளார் கனடா வாழ் தமிழரான சிவநாயகம் மோகனதாஸ்.

புற்று நோயாளிகளின் வாழ்வில் ஒளியூட்டுவதற்காக சமூக சேவை என்ற உயரிய நோக்கோடு இவர் ஆரம்பித்த பயணம் முடிவுக்கு வந்துள்ளது.

48 மணி நேரமாக தொடர்ச்சியாக ஊசிகளை தலையில் ஏற்றிய மோகனதாஸ் 2100 ஊசிகளுடன் தனது புதிய சாதனை நிகழ்வை நிறைவு செய்துள்ளார்.

தொடர்ந்து இரண்டு நாட்கள் இடம்பெற்ற இந்த சாதனை நிகழ்வை ஆயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டிருந்தனர்.

சீன நாட்டு இளைஞர் ஒருவர் முதலில் 2000 ஊசிகளை தலையில் ஏற்றியதே உலக சாதனையாக இருந்து வந்தது.

கனடாவில் கடந்த ஆண்டு (2011) டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி 2025 ஊசிகளை ஏற்றி சீன இளைஞரின் சாதனையை முறியடித்தார் மோகனதாஸ்.

தற்போது அதனையும் தாண்டி 2100 ஊசிகளை ஏற்றி தனது சாதனையையே மீண்டும் முறியடித்து மகத்தான வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

# மண்டைதீவு- வேப்பந்திடல் முத்துமாரி அம்மன் ஆலயக்கூட்டம்

(மண்டைதீவு)

மண்டைதீவு - வேப்பந்திடல் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஆலய நிர்வாகசபைத் தலைவர் தலைமையில் காலை 10.00 மணிக்கு கோவில் மண்டபத்தில் ஆரம்பமாகும் கூட்டத்தில் ஊரில்வாழும் மற்றும் இங்கிருந்து இடம் பெயர்ந்துவாழும் சைவப்பெருமக்கள் ஆலய நிர்வாகபேராளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பொதுக்கோவிலாகி கும்பாபிஷேகம் ஆடிமாதம் நடைபெற்று சங்காபிஷேகம் நிறைவுற்ற ஆலயத்தின் திருவிழாக்கள் மற்றும் திருப்பணிகள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

கடந்த வருட வரவு செலவுக்கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்படும். இதனைத் தொடர்ந்து புதியநிர்வாக தெரிவு இடம் பெறுமென அறங்காவல் சபை அறிவித்துள்ளது. (23)

# பொன்னாலை வரதராசப் பெருமாள்



புராதன வரலாற்றுச் சிறப்புக்களை கொண்டு விளங்கும் ஆலயம் பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பொருமாள் ஆலயம் தட்சண கைலாய புராணம் இவ்வாலய அற்புத வரலாற்றுச் சிறப்புக்களைக் கூறு கின்றது. தட்சண கைலாய புராணத்தில் பொன்னாலைப் பெருமை உரைத்த படலத்தில் இவ்வாலயத் தின் தோற்றச் சிறப்புக்கள் கூறப்படுகின்றது.

முன்னொரு சமயத்தில், துர்வாச முனிவரினால் தேவேந்திரன் சாபம் பெற்று நீசத் தன்மை அடைந்தான். அப்பொழுது இந்திரன் "ஒ பகவானே அத்திரி முனிவரின் குலத்தில் பிறந்தாய, நான் செய்த பிழையைப் பொறுத்தருள்வாய் எனது சாபம் நீங்க ஒரு உபாயம் கூறியருள்க நல்ல விரத முடை யோய்" என்று துர்வாச முனிவரை வேண்டினான்.

இந்திரனால் பிரார்த்திக்கப்பட்ட முனிவருள் மேலானவராகிய துர்வாச முனிவர் இந்திரனைப் பார்த்து ஓ இந்திரனே! உன்சாப விமோசன காரியத்தில் துக்கமடைய வேண்டாம். சேது மத்தியிலிருக்கும் இலங்கையிலே பொன்னாலையம் என்னும் பட்டணத்திலே வலைஞபர் குலத்திலே நீ பிறப்பாய் ஜனார்த்தனராகிய வாசுதேவர் ஒரு காலத்தில் கூர்ம அவதாரம் எடுப்பார்.

ஒரு சமயம் இந்திரன் தாயின் மோதிரமொன்று யாராலும்

**பொன்னொளி விமானக்காட்சியை ஆமை அவதரா சிறப்பை விளக்கும் பொன்னாலை- வரதராசப் பெருமாள் ஆலயம்**

எடுக்க இயலாத வகையில் பாதாளக் கிணற்றுக்குள் விழ நாராயணர் ஆமையாகச் சென்று அதனை எடுத்துக் கொடுத்தார் என்றும் அந்தக் கூர்மமே இந்திரனுக்கு சாபவிமோசனம் அளித்தது என்றும் வடமொழி தட்சண கைலாய புராணத்தில் விளக்கப்பட்டுள்ளதாம். அந்த கூர்மம் உன் வலையினாலேயே கட்டப்படும். இது மெய் அந்த ஆமையின் அங்கம் தீண்டப்பட்டதும் உன் சாபத்தினின்றும் விடுபடுவாயென்று கூறியதோடு துர்வாச முனிவர் தம் இருப்பிடத்தை அடைந்தார்.

வலைஞனாகப் பிறந்த இந்திரன் ஒரு நாள் இப்போது ஆலயம் அமைந்துள்ள இடத்திற்கு அருகிலுள்ள கடலில் வலை வ்சினார். வலையில் ஒரு ஆமை அகப்பட்டது அதனை அவனால் தனித்துக் கரை சேர்க்க முடியவில்லை. தன் இனத்தவரின் துணையை நாடி அவர்களை அழைத்து வந்தான். வந்தவர்கள் அனைவரும் அங்கே ஒரு அதிசயத்தைக் கண்டனர். அச்சமயத்தில் ஆகாய மார்க்கத்தில் பொன்னொளி வீசும் விமானம் ஒன்று காணப்பட்டது. அதனைக் கண்டு அதிசயம் நிறைந்தவர்களாக ஆமையின் பக்கத்தில் விரைவாகச் சென்று அடைந்தனர் அச்சமயத்தில் அந்த ஆமை கல் லாயிருத்தலைக் கண்டதும் இது என்ன அதிசயம் என்று வியந்தார்கள். பின்பு அவர்கள் அனைவரதும் மனதில் இவ் ஆமை இலக்குமி பதியாகிய நாராயணனே என்றும் காணப்பட்ட இவ் விமானம் அவருடையதே என்றும் ஒரு துணிவு உண்டானது. அத்துணிவை முன்னிட்டு நாராயணனின் பிரதிஷ்டைக் குரிய இந்த இடத்திலே நல்ல நாளிலே நல்ல முகூர்த்ததிலே உத்தம பிராமணரைக் கொண்டு வைகாசன தந்திர விதிப்படி பிரதிஷ்டை செய்தார்கள் அவர்கள் அப்படி முயற்சித்து விஷ்ணுவைப் பிரதிஷ்டை செய்து "வரதராசப் பெருமாள்" என்று நாமகரணம் செய்து வழிபட்டார்கள். இத்தகு பெருமைகள் கொண்ட ஆலயத்தில் இன்று (2012.09.07) தேர்த்திரு விழா மிகச்சிறப்பாக நடை பெறுகின்றது. காத்தற் கடவுள் தேரேறி அருள் பாலிக்கும் திருக்காட்சி யில் கலந்து அனைவரும் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

வர்ணனைக்கலாநிதிமதுர கவி,காரை.எம்.பி. அருளானந்தன்.
பணிப்பாளர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்.

**கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து சரியான விடை எழுதுக.**

கொழும்பு பாரதி கல்லூரியிலிருந்து பேருந்து வண்டி கண்டியை நோக்கிப் புறப்பட்டது. எம்மில் பலர் இதற்கு முன்பு கண்டிக்குச் சென்றதே இல்லை. மலைகள், மகாவலிகங்கை, பேராதனைப் பூங்கா, பல்கலைக்கழகம், தலதாமாளிகை, தேயிலைத் தோட்டங்கள் பலவற்றைப் பார்வையிடும் எண்ணம் எம்மனதில் அலைமோதின.

33. எங்கிருந்து பேருந்து வண்டி புறப்பட்டது?

..............................................

34. பேருந்து வண்டி எவ்விடத்தை நோக்கிச் சென்றது?

..............................................

..............................................

**பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

35 Milk.......................... 36. Teeth ..........................

37. Televison .......................... 38. November ..........................

**பின்வரும் சிங்களச் சொல்லை தமிழில் தருக.**

39. சிஸ்யா .......................... 40. மம ..........................

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

41. கடிகாரமொன்றின் நிமிடமுள் 2 இலும், மணிமுள் 12 இலும் நின்றால் என்ன நேரம்?
1. 2 மணி  2. 12 மணி  3. 12 மணி 10 நிமிடம்

42. நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்தக்கூடியது
1. நிறுத்தற் கடிகாரம்  2. அளவுநாடா  3. விற்றராசு

43 தார் வீதியில் செல்லக்கூடியது?
1. ஓடம்  2. புகைவண்டி  3. சைக்கிள் வண்டி


44. தாவரங்களில் பூச்சிகளைக் கவரத்தக்க பகுதி
1. நிறஇலை  2. பூ  3. பழம்


45. 12 வயதுடைய ஒருவரை அவதானிக்கத்தக்க இடம் எது?
1. பாடசாலை  2. அலுவலகம்  3. தியேட்டர்


46. பார்வை தெரியாத ஒருவரை அடையாளம் காண்பதற்கு உதவுவது
1. வெள்ளைப் பிரம்பு  2. வெள்ளை உடை  3. கறுப்புக் கண்ணாடி

47. வைத்தியருடன் தொடர்புடையவர்
1. தாதி  2. ஆசிரியர்  3. நோயாளி

**பின்வரும் உருக்களை அவதானித்து, இந்த உருக்களின் பயன்பாடு பற்றி புள்ளிக் கோட்டில் எழுதுக.**


உரு - 1


உரு - 2


உரு - 3

48. உரு - 1 : ..............................................
49. உரு - 2 : ..............................................
50 உரு - 3 : ..............................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I



# கல்வி முரசு

2 மணி



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

பொறுமையின் சிகரமாம் பூமாதேவியை கௌவி மூடிக்கொண்டிருந்த காரிருளானது மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது. வானின் உச்சியிலே பளபளவென்று வைரங்களை வாரி இறைத்தது போல பிரகாசித்துக் கொண்டிருந்த சின்னஞ்சிறு விண்மீன்களின் வண்ண ஒளி படிப்படியாகக் குறையத் தொடங்குகிறது. கிழக்கு வானம் செக்கச் சிவந்து பிரகாசித்த வண்ணம் இருக்கிறது. ஆதவன் தனது பொன்மயமான அழகிய ஒளிக்கதிர்களைப் பூமாதேவியின் மீது மெல்ல மெல்லப் பரவிடுகின்றான். தொடர்ந்து கீழ் வானில் பஞ்சு போன்ற முகில் கூட்டங்களுக்கு மத்தியிலே தங்கத் தகட்டைப் போன்று கதிரவன் மேலே எழத் தொடங்குகின்றான். தாமரை மலர்கள் தம் தலைவனின் வருகை கண்டு தலைநிமிர்ந்து முகமலர்ந்து, மொட்டவிழ்ந்து உவகையுடன் வரவேற்கின்றன. அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது. பறவைகளின் குதூகலமான இனிய நாதங்கள் வானில் பரவுகின்றன. ஆலயங்களில் மணியோசை மக்களை அகங்குளிரச் செய்கின்றன. வெள்ளைப் புறாக்களைப் போன்று பாடசாலைச் சிறார்கள். ஆகா!...........என்ன இனிய காட்சி.

01. "வானம்" என்பதற்கு ஒத்த சொல் தருக.

..............................................

02. இருக்கிறது என்பதை இறந்த காலத்தில் எழுதுக.

..............................................

03. பந்தியில் காணப்படும் அடுக்கு மொழிச் சொல் ஒன்றினை எழுதுக.

..............................................

04. மணியோசை என்பதைப் பிரித்து எழுதுக.

..............................................

05. "அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது" இவ் வாக்கியத்தின் எழுவாய் எழுதுக.

..............................................

06. உவகை என்பதற்கு எதிர்ச்சொல் தருக.

..............................................

07. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துடைய சொல் தருக.
1) விண்மீன் ..............................................
2) ஆதவன் ..............................................

08. 1) பந்தியில் காணப்படும் இணைமொழிச் சொல் ஒன்றினை எழுதுக.

..............................................

2) அடுக்கிடுக்குத் தொடர்ச் சொல் ஒன்றை எழுதுக.

..............................................

09. பின்வரும் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
1) மலர் ..........................  2) பாடசாலை ..........................

10. மேலே உள்ள பந்தியில் இரட்டை மொழியினை எழுதுக.

..............................................

சுருக்கமான விடை தருக.

11. உணவு சமைக்கப் பயன்படும் பூக்கள் இரண்டு தருக.
1) .............................. 2) ..............................

12. தாவர உண்ணிகள் இரண்டு தருக.
1) .............................. 2) ..............................

13. தச்சுத் தொழிலாளி பயன்படுத்தும் இரண்டு உபகரணங்கள் தருக.
1) .............................. 2) ..............................

14. தோற்கருவிகள் இரண்டு தருக.
1) .............................. 2) ..............................

15. மாப்பொருள் உணவுகள் இரண்டு தருக.
1) .............................. 2) ..............................

16. பூரணமான உணவுகள் இரண்டு தருக.
1) .............................. 2) ..............................


17. இலங்கையின் தேசியக் கொடியின் நிறங்கள் இரண்டு தருக.
1) .............................. 2) ..............................

**பின்வரும் பந்தியை வாசித்து அதைத் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வு பற்றித் தொடர்ந்து எழுதுக.**


18. அன்று வழமைபோல் ஆதவனும் கீழ் வானில் மலர்ந்துவிட்டான். என்றும் போல சகல விடயங்களும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. எமது வீடு அமைந்திருந்தது கடற்கரைப் பிரதேசம் என்பதால் கடலலையின் ஓசை வழமைபோல் கேட்ட வண்ணம் இருந்தது. நான் மேசையில் அமர்ந்து எனது பாடங்களைப் படித்துக்கொண்டிருந்தேன். வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிய எனது தந்தை வேகமாக வந்தார். வந்ததும் இன்றைக்கு நான் கடலைப் பார்த்தேன். கடலில் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிகிறது என்று சொல்லி முடிப்பதற்குள் அலையின் பேரொலியும், ஏதோ வெடித்த சத்தமும் எம்மை அதிரவைத்தது. உடனே நானும் எனது பெற்றோரும் பதற்றத்துடன் வெளியே ஓடி வந்தோம். என்ன அமைதியாக இருந்த கடல் அன்னை பொங்கியெழுந்து கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் பொங்கி வந்த கடல் அன்னை திடீரென்று தன்னை உள்வாங்கிவிட்டாள். என்ன! ஆச்சரியம ........................ கடலும் பாறைகளும் படிந்த தரையாகக் காட்சியளித்தது. ஆனால் கண்ணிமைப்பதற்குள்ளே ..............................

இதனைத் தொடர்ந்து நடந்தவற்றை விபரிக்கும் வகையில் ஆறு வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற்றிருக்க வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.)

**கீழ்வரும் படங்களின் சரியான தமிழ்ச் சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக.**




19. ..............................



20. ..............................




21. ..............................



22. ..............................



பின்வரும் A, B, C, D அடைப்புக்களைப் பயன்படுத்தி 23 தொடக்கம் 26 வரையான வினாக்களுக்கு விடைதருக.




23. இந்த அடைப்புகளிடையே இரண்டு பாடசாலை உபகரணம் வீதம் உள்ள இரு அடைப்புக்களும் எவை?
1) B, C 2) B, D 3) C, D

24. இந்த அடைப்புகளிடையே இரண்டு பழங்கள் வீதம் உள்ள மூன்று அடைப்புக்களும் எவை?
1) D, B, C 2) A, B, D 3) A, B, C

25. இந்த அடைப்புக்களிடையே போக்குவரத்துச் சாதனங்கள் காணப்படும் அடைப்புக்கள் எவை?
1) A, D 2) C, D 3) B, D

26. இந்த அடைப்புக்களிடையே மரக்கறியுள்ள அடைப்புக்கள் எவை?
1) B, D, A 2) B, C, D 3) A, B, C

**பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமானதாக ஒவ்வொன்றின் கீழேயுள்ள நான்கு சொற்களில் ஒரு சொல் அமையும். அச்சொல்லின் கீழ்க் கோடிடுக.**

27. புண்ணிய தலங்களுக்குச் செல்லும் பயணம்
1) பிரயாணம் 2) யாத்திரை 3) சுற்றுலா 4) நடைபவனி


28. போட்டி நிகழ்ச்சிகளில் சரி பிழை கூறுபவர்
1) அதிபர் 2) நடுவர் 3) மத்தியாளர் 4) சட்டம்பியார்

29. துணியினால் தலையிலே அழகாகக் காட்டப்படுவது
1) தொப்பி 2) தலைப்பாகை 3) தலப்பா 4) முட்டாக்கு

30. குற்றவாளிகள் தண்டனை அனுபவிக்கும் இடம்
1) மனை 2) குடிசை 3) குகை 4) சிறை

31. பல துறைகளிலும் உயர்கல்வி பெறும் இடம்
1) ஆச்சிரமம் 2) பல்கலைக்கழகம் 3) கல்லூரி 4) மடைப்பள்ளி

32. **கீழ்வரும் எண் கோலத்தை அவதானித்து இடைவெளிக்குரிய சரியான எண்ணைத் தெரிவு செய்க.**




1) 24
2) 36
3) 48


# பட்டாசு தொழிற்சாலை விபத்து; விசாரணை நடத்தக் கோரிக்கை

(புதுக்கோட்டை)


சிவகாசி பட்டாசு தொழிற்சாலையில் நடந்துள்ள வெடிவிபத்து குறித்து, உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடவேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சீத்தாராம் யெச்சூரி தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுக்கோட்டையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தை திறந்துவைத்து அவர், நிருபர்களிடம் கூறியதாவது: விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகில் உள்ள பட்டாசு தொழிற்சாலையில் நடந்த வெடி விபத்தில், அங்கு வேலை பார்த்துவந்த தொழிலாளர்கள் 38 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். இந்தத் துயர சம்பவம் மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது. வெடிவிபத்தில் பலியான தொழிலாளர்களின் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகாசி, பட்டாசு ஆலையில் இதுபோன்ற வெடி விபத்துகள் அடிக்கடி நடக்கிறது. இதில் சிக்கி ஏராளமான தொழிலாளர்கள் பலியாகி வருகின்றனர். விபத்துக்கான காரணம் கண்டறியப் பட வேண்டும். இதற்காக உயர் மட்ட விசாரணைக்கு, தமிழக அரசு உத்தரவிடவேண்டும். இது போன்ற துயர சம்பவங்கள் மேலும் நடக்காமல் இருக்க, தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.




# 100ஆவது செயற்கைக் கோளை விண்ணில் ஏவும் இஸ்ரோ




இஸ்ரோவின் 100 ஆவது செயற்கைக்கோள் எதிர்வரும் ஞாயிற்றுகிழமை விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

இஸ்ரோ (இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம்) தனது பி.எஸ்.எல்.வி. செயற்கைக்கோளுடன் பிரான்ஸ் நாட்டிற்கு சொந்தமான செயற்கைக் கோள் மற்றும் ஜப்பான் நாட்டிற்கு சொந்தமான செயற்கைக் கோள்களை இணைத்து விண்ணில் செலுத்த உள்ளது.

இவை சென்னை அருகே உள்ள ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்திலிருந்து செலுத்தப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்கிறார்.

மேலும் இம்மாதம் 21 அல்லது 22ஆம் திகதியில் ஜி - சாட் வகை செயற்கைக் கோள் விண்ணில் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.




# இணையத்தைப் பயன்படுத்துவோர் இந்தியாவில் அதிகரிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் கைத்தொலைபேசியைத் தொடர்ந்து இணையத்தளம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அரசுக்கு சொந்தமான பி.எஸ்.என்.எல். தவிர தனியார் நிறுவனங்களும் போட்டி போட்டுக்கொண்டு விலை குறைப்பு செய்து இணையத்தள இணைப்பு வழங்கி வருகின்றன.

இணையத்தளம் பார்க்ககூடிய வகையில் கைத்தொலைபேசிகளும் விற்பனைக்கு வந்துள்ளதால் கைத்தொலைபேசியில் ரூபா 10இற்கு கூட இணையத்தள இணைப்பு கிடைக்கிறது. அந்த அளவுக்கு மலிவாகி விட்டது.

இதனால் இந்தியாவில் இணையத்தளம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்திய இணையத்தளம் - கைத் தொலைபேசி கூட்டமைப்பு சார்பில் இணையத்தளம் பயன்படுத்துவோர் பற்றி நாடு முழுவதும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு இணையத்தளம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 16 சதவீதம் அதிகரித்து இருப்பதாகவும், இந்த ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் 15 கோடி பேரிடம் இணையத்தள இணைப்பு இருக்கும் என்றும் தெரிய வந்துள்ளது.

நகர்ப்புறங்களில் வசிப்போர்தான் இணையத்தளத்தை அதிகம் பயன்படுத்துகிறார்கள். கிராமப் பகுதிகளில் 4 1/2 கோடி இணையத்தள இணைப்புகள் இருப்பதாகவும் நகர் பகுதியில் 10 1/2 கோடி இணைப்புகள் இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

# அழகிரி, சிதம்பரத்தின் சொத்துகள் ஒரே ஆண்டில் அதிகரிப்பு!



மத்திய அமைச்சர்களின் சொத்து விவரம் வெளியிடப்பட்டுள்ளது. கடந்தாண்டுடன் ஒப்பிடும் போது, சில அமைச்சர்களின் சொத்து மதிப்பு அதிகரித்துள்ளது. இதில், மத்திய ரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சர் மு.க.அழகிரியின் சொத்து மதிப்பு, கடந்த ஓராண்டில் 17 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்தாண்டு அமைச்சர்களின் சொத்து விவரத்தை பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ளது. இதில்,சில அமைச்சர்களின் சொத்துகள் மதிப்பு, கணிசமாக அதிகரித்து இருப்பது தெரிய வந்துள்ளது. அமைச்சர்களின் சொத்து விவரம் வருமாறு:



மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் மு.க.அழகிரி, அவரின் மனைவி காந்தி ஆகியோரின் சொத்து மதிப்பு 37 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு, அவர் சொத்து மதிப்பு, 32 கோடி ரூபாவாக இருந்தது. தற்போது 17 சதவீதம் உயர்ந்துள்ளது. அழகிரியிடம் 35 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள "ரேஞ்ச் ரோவர்" ரக காரும், ஹோண்டா சிட்டி காரும் உள்ளன. அவரின் மனைவி காந்தி 75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பி.எம்.டபிள்யு காரைப் பயன்படுத்துகிறார்.

மத்திய நிதியமைச்சர் சிதம்பரம், அவரின் மனைவி சொத்துகளின் மதிப்பு இந்த ஆண்டு 30 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. கடந்தாண்டு 23.67 கோடி ரூபாயாக இருந்தது. காரைக்குடி மானகரியில் உள்ள நிலம் மற்றும் கட்டடத்தின் மதிப்பு 3.11 கோடி ரூபாய். அவரின் மகன் கார்த்தி சிதம்பரத்திற்கு, 1.6 கோடி ரூபாய் மதிப்பு சொத்துக்கள் உள்ளன.

விவசாயத் துறை அமைச்சர் சரத்பவார் மற்றும் அவரின் மனைவியின் பெயரில் 16 கோடி ரூபாய் மதிப்பு சொத்துகள் உள்ளன. டில்லியில் துவாரகா செக்டாரில் ஒரு பிளாட்டும், வங்கியில் "பிக்சட் டெபாசிட்"ஆக 1.15 கோடி ரூபாயும் உள்ளன. பவாருக்கு சொந்தமாக கார் எதுவும் இல்லை.

# தெலங்கானா விவகாரம் இந்த மாதம் முடிவு



(ஐதராபாத்)

தெலங்கானா விவகாரத்தில் இந்த மாதத்தில் மத்திய அரசு முடிவு செய்யும் என்று டி.ஆர்.எஸ். கட்சி தலைவர் சந்திரசேகர் ராவ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக டில்லிக்கு சந்திரசேகர் ராவ் நேற்று முன்தினம் புறப்பட்டு சென்றார். ஐதராபாத்தில் அவர் அளித்த பேட்டியில், தனி தெலங்கானா மாநிலம் அமைப்பது தொடர்பாக இந்த மாதம் மத்திய அரசு முடிவு செய்யும். டில்லியில் நான் தங்கியிருக்கும்போது இது தொடர்பாக பேச்சு நடக்கவும் வாய்ப்புகள் உள்ளது என்றார்.




அன்னை தெரசாவின் நினைவு தினத்தன்று, கொல்கத்தாவில் உள்ள அவரது நினைவிடத்தில் பிரார்த்தனை செய்து, அஞ்சலி செலுத்தும் கன்னியாஸ்திரிகள்.

## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர் : வி. றெட்சன்

முகவரி: 42/8, குருநகர் யாழ்ப்பாணம்

அகவை 4 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# சிரியாவில் தொடரும் போர்; 1 இலட்சம் பேர் இடப்பெயர்வு



(திரிப்போலி)

சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டு போரின் காரணமாக கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் நாட்டை விட்டு வெளியேறி உள்ளதாக ஐ.நா. தகவல் வெளியிட்டுள்ளது.

இது குறித்து ஐ.நா பொதுச் செயலாளர் பான் கி மூன் பேசுகையில், சிரியாவில் மனிதநேய உணர்வுகள் மெல்ல மெல்ல அழிந்து கொண்டிருக்கின்றன.


இராணுவமும், போராட்டக்காரர்களும் பொதுமக்களைப் பாதுகாக்க தவறிவிட்டன. சர்வதேச மனிதநேய சட்டம் என்பது அங்கு அறவே இல்லாமல் போய்விட்டது.

எனவே அண்டை நாடுகள் தங்களிடம் அடைக்கலம் தேடி வரும் மக்களிடம் அன்பு காட்ட வேண்டும்.

சண்டையை நிறுத்துவதற்கு உதவி செய்யுங்கள். ஆயுதம் விற்பவர்களால் மேலும் மேலும் துயரங்கள் தான் அதிகரிக்கும். இதனால் ஏற்படும் விளைவுகளை சிறிதளவும் எண்ணிப் பார்க்க இயலவில்லை என்றார்.

இதேவேளை இதுவரையிலும் 235,300இற்கும் அதிகமானோர் அகதிகளாகத் தம்மைப் பதிவு செய்யக் காத்திருப்பதாகவும் ஐ.நா அறிக்கை தெரிவிக்கிறது.

# 35 ஆண்டுகளின் பின்னர் சூரியனை அடையும் விண்கலம்




(வொஷிங்டன்)

சூரிய குடும்பத்தில் உள்ள வியாழன், சனி கிரகங்களை ஆய்வு செய்வதற்காக அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் வாயேஜர்-1, வாயேஜர்-2 என்ற விண்கலங்களை அனுப்பியுள்ளது.

எட்ஸ்டோன்(வயது -76) என்ற விஞ்ஞானியால் உருவாக்கப்பட்ட இந்த விண்கலங்கள் கடந்த 1977ஆம் ஆண்டில் ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

அதில், வாயேஜர்-2 என்ற விண்கலம் இரண்டு வாரத்துக்கு முன்பு சூரிய குடும்பத்துக்குள் சென்றடைந்தது. தற்போது அது சூரியனில் இருந்து 1440 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இந்நிலையில் வாயேஜர்-1 என்ற விண்கலம் சூரிய குடும்பத்தை சென்றடையும் நிலையில் உள்ளது. அது சூரியனில் இருந்து 1770 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

இந்த இரண்டு விண்கலங்களும் வியாழன் மற்றும் சனிக் கிரகத்தைப் படம் பிடித்து அனுப்பியுள்ளன. அங்குள்ள எரிமலைகள், கடல் மற்றும் பனி மண்டலங்கள், சனி கிரகத்தின் டைடன் துணை கோள் போன்றவைகள் குறித்து பல தகவல்களை அனுப்பியுள்ளது.

தற்போது சூரிய குடும்பத்துக்குள் பல கோணங்களில் நுழைந்து ஆய்வு மேற்கொண்டு வருகிறது. மனிதர்கள் தயாரித்து அனுப்பிய விண்கலங்களில் இதுதான் பல 100 கோடி மைல் தூரம் பறந்து சென்று பலவிதங்களில் செயற்படுவதாக விஞ்ஞானிகள் மகிழச்சி தெரிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# போதைப்பொருள் கடத்தல்ராணி க்ரிசெல்டா சுட்டுக்கொலை



(மெடலின்)

கொலம்பியாவில் பிரபல போதைப் பொருள் கடத்தல் ராணியான க்ரிசெல்டா பிளான்கோ (வயது-69)சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

1970 மற்றும் 80ஆம் ஆண்டுகளில் போதைப் பொருள் கடத்தலுக்குப் பெயர் போனவர் க்ரிசெல்டா பிளான்கோ

இவர் புளோரிடாவில் நடந்த பல்வேறு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுக்குக் காரணமாக இருந்தவர். தவறுதலாக சுட்டுக் கொல்லப்பட்ட 2 வயது குழந்தையின் கொலை வழக்கில் சிக்கி கடந்த 1985ஆம் ஆண்டு அமெரிக்காவில் கைது செய்யப்பட்ட இவருக்கு 60 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவர் 20 ஆண்டுகளைச் சிறையில் கழித்த பிறகு கொலம்பியாவுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார். இந்நிலையில் மெடலின் நகரில் உள்ள கறிக்கடையில் இருந்து வெளியே வந்த இவரை மோட்டார் சைக்கிளில் வந்த 2 பேர் சுட்டுக் கொன்றனர். இதில் க்ரிசெல்டாவில் தலையில் 2 குண்டுகள் பாய்ந்த நிலையில் அவர் இறந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்று சுட்டுக் கொன்று விட்டு தப்பியோடுவது க்ரிசெல்டாவின் திட்டமாக இருந்தது. தற்போது அவரது திட்டத்தைப் பயன்படுத்தி அவரையே கொலையாளிகள் கொன்றுவிட்டனர்.

# தலிபான் தீவிரவாதிகளுக்கு பாக்.விமானப்படை உதவி

- தகவல் அம்பலம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் விமானப் படைத் தளத்தில் தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதற்கு, விமானப்படைத் தள பாதுகாப்பு வீரர்கள் உதவி செய்தது தற்போது தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தர்னில் கம்ரா என்ற இடத்திலுள்ள விமானப் படை தளத்தின் மீது கடந்த மாதம் 16ஆம் திகதி தெஹ்ரிக்- இ- தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

அப்போது நடந்த துப்பாக்கி சூட்டில் 9 தீவிரவாதிகளும், 2 இராணுவ வீரர்களும் பலியானார்கள். இதில் மொத்தம் 3 விமானங்கள் சேதமடைந்தன.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து விமானப்படை உயர் அதிகாரிகள், விமானத் தளத்தில் இருக்கும் கண்காணிப்பு கமராக்களை ஆய்வு செய்ததில் தீவிரவாதிகளுக்கும், விமானப் படை தளப் பாதுகாப்பு வீரர்களுக்கும் தொடர்பு இருப்பது அம்பலமானது.

இந்த கமராக்களில் தீவிரவாதிகள் நடமாட்டம் குறித்த 14 நிமிட காட்சி இடம் பெற்றிருக்கிறது. அதில் பாதுகாப்பு வீரர்கள் ஒரு அறைக்குள் சென்று மறைந்து கொள்வது, தாக்குதலுக்கு முன்பு தீவிரவாதிகள் விமானப்படைத் தளத்தில் மேஜையை சுற்றி அமர்ந்து விவாதிப்பது போன்ற காட்சிகள் இருபது தெரியவந்துள்ளது.

# அமெரிக்காவில் கடன் சுமை அதிகரிப்பு




(வொஷிங்டன்)

அமெரிக்காவில் கடன்சுமை 16 இலட்சம் கோடி டொலரை எட்டி இருப்பதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

குடியரசு கட்சி சார்பில் அமெரிக்க துணை ஜனாதிபதிக்குப் போட்டியிடும் பால்ரயன், லோவாவில் நடந்த தேர்தல் பிரசாரத்தில் பேசுகையில், கடன் சுமை அதிகரித்து வருவது நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் கேடு விளைவிக்கும். இது ஜனாதிபதி ஒபாமா அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் தகர்த்துவிட்டது. இந்தக் கடன் சுமை வேலை வாய்ப்பு பிரச்சினையை உருவாக்கி விட்டுள்ளது.

மேலும் நமது குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகளுக்கு எதிர்காலம் குறித்த பயத்தை உருவாக்கி உள்ளது.

அமெரிக்காவை வழிநடத்த எங்கள் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் மிட் ரோம்னிக்கு வாக்களித்தால் இந்தச்சூழ்நிலை மாறும். செலவுகளைக் குறைத்தும், பற்றாக்குறை இல்லாத வரவு-சிலவு மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்கியும் தருவோம் என்றார் பால்ரயன்.

மிட் ரோம்னி தேர்தல் பிரசார குழுவின் செய்தித் தொடர்பாளர் ரியான் வில்லியம்ஸ் கூறுகையில், ஒபாமா பதவியேற்ற பின்னர் வேலையில்லாத் திண்டாட்டமும், பொருளாதாரத் தேக்கம் போன்றவை வந்துவிட்டன. நாட்டின் அபரிமித கடன் சுமையானது எதிர்கால சந்ததிகளைத் துயரத்துக்கு ஆளாக்கி விட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதேவேளை, நாடாளுமன்ற குடியரசு கட்சியின் அரசியல் குழுத் தலைவர் டாம் பிரைஸ் கூறுகையில், கடந்த 40 ஆண்டுகளாக இருந்த கடன் சுமையை விட இப்போது கடன்சுமை அதிகரித்து விட்டது.அமெரிக்க வரலாற்றில் ஒரு முறை ஜனாதிபதி யாக இருந்தவர்களால் உருவான கடன் சுமை களில் இதுதான் பெரிய தொகை ஆகும். மேலும், 2 கோடி அமெரிக்கர்கள் வேலை இல்லாமல் உள்ளனர். கடந்த 42 மாதங்களில் வேலை வாய்ப்பின்மை 8 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றார்.

# இறந்து கரையொதுங்கும் எலிகள்; துர்நாற்றத்தால் மக்கள் அவதி



(வொஷிங்டன்)

அமெரிக்காவில் வீசிய 'ஐசக்'சூறாவளியில் சிக்கி உயிரிழந்த ஆயிரக்கணக்கான எலிகள் மிசிசிபி கடற்பகுதியில் கரை ஒதுங்கியுள்ளன. இதனால் அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுகிறது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தின் கடைசியில், அமெரிக்காவின் வடக்குப் பகுதியைத் தாக்கிய ஐசக் சூறாவளியால் பல பகுதிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாயின.

லூசியானாவில் ஏராளமான சதுப்பு நிலப்பகுதிகள் உள்ளன. இப்பகுதிகள் ஆயிரக்கணக்கான எலிகளின் வசிப்பிடமாகத் திகழ்கின்றன. சூறாவளியின் வேகத்தில் இப்பகுதியில் வெள்ளம் பாய்ந்ததில் ஏராளமான எலிகள் இறந்துவிட்டன. மேலும் பல ஆயிரக்கணக்கான எலிகள், வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு கடலில் தள்ளப்பட்டன.

சூறாவளியில் சிக்கி இறந்த இவற்றின் உடல்கள் மிசிசிபி கடற கரையில் ஒதுங்கத்தொடங்கி உள்ளன. இதனால் அப்பகுதி முழுவதும் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுவதோடு, நோய்க் கிருமிகள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இவைகளை அகற்றும் பணியில் ஒப்பந்ததாரர்கள் பலர் ஈடுபட்டு, 16 ஆயிரம் எலிகளின் உடல்கள் அகற்றப்பட்டுள்ளன. இவறறைத் தவிர பாம்பு, முயல், மான் போன்றவற்றின் உடல்களும் கரையில் ஒதுங்கி வருவதாக ஒப்பந்த ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

# நெடுந்தீவை வாட்டுகிறது வறட்சி



(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் என்றுமில்லாதவாறு வறட்சி நிலை காணப்படுகின்றது. இதன் விளைவாக நெடுந்தீவு பிரதேசத்தில் பெருமளவாகக் காணப்படும் கால்நடைகள் மரணமடைந்து வருகின்றன.

அத்தோடு நெடுந்தீவின் பல கிணறுகள், குளங்கள் வற்றிய நிலையில் உள்ளதோடு நெடுந்தீவின் மிகப்பெரிய குளமாகச் சொல்லப்படும் வெட்டுக்களியானது வற்றி அதனுள் இருந்து மிகப்பெரிய அளவில் புழுதி கிளம்புவதையும் அப்புழுதியானது வீதியில் பயணிப்போருக்கும், அப்பகுதியில் குடியிருப்போருக்கும் மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளது. இக்குளம் கடந்த வருடம் புனரமைப்புச் செய்யப்பட்டது. இருப்பினும் தற்போதைய வறட்சியின் விளைவாக மிகவேகமாக வற்றி இந்தநிலை தோன்றியுள்ளதாக அப்பகுதியில் வசிப்பவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும் இப்புழுதி மண்ணானது நெடுந்தீவின் பலபகுதிகளுக்கும் செல்வதோடு அண்டைய தீவுகளான நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய பகுதிகளுக்கும் செல்வதாகக் குறிப்பிடப்படுகின்றது. மேலும் குடிநீரைப் பெறுவதற்கு மக்கள் சைக்கிள் மற்றும் உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தி செல்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. இதனுடன் பிரதேச சபையினாலும் மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகிக்கப்படுவதோடு கடற்படையினராலும் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி. யின் நெடுந்தீவு பிரதேச அமைப்பாளரும், நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளருமான தானியேல் றெக்சியன் குடிநீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மாங்குளத்தில் கிராம ரீதியாக பொலிஸ் முறைப்பாட்டுப் பெட்டிகள்

(கிளிநொச்சி)

மாங்குளம் பொலிஸாரினால் கிராமங்கள் தோறும் முறைப்பாட்டுப் பெட்டிகள் வைக்கப்படுவதால் மக்களின் பிரச்சினைகள் உடனுக்குடன் தீர்வு காணப்படுவதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராமங்கள் முழுவதுமாக முறைப்பாட்டுப் பெட்டிகள் வைக்கப்பட்டது. இதன் பின்னர் மக்கள் இலகுவான முறையில் தமது முறைப்பாடுகளை அறிவிக்கக் கூடியதாக இருந்தது.

இதனூடாகப் பல்வேறுபட்ட மக்களின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தற்போது மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பாடசாலைகளில் முறைப்பாட்டுத் தகவல் பெட்டிகள் வைககப்பட்டுள்ளது.

இதன் மூலம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளிலுமுள்ள மக்கள் தமது பல்வேறு பிரச்சினைகள் குறித்துத் தெரிவிக்க முடியும்.

மேலும் இதுவரை முறைப்பாட்டுப் பெட்டிகள் மூலம் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து மக்கள் தமது பிரச்சினைகளை முறைப்பாட்டுப் பெட்டிகள் மூலம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தித் தீர்வுக்கான ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் பொதுமக்களைப் பொலிஸார் கேட்டுள்ளனர். (28)

# கல்வி சாரா ஊழியர்கள் அடையாள பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு மணி நேர அடையாளப் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டமொன்றை மேற்கொண்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் முழுமையான செயற்பாட்டை வலியுறுத்தி அனைத்துப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் தொழிற்சங்கம் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளும் இத்தகைய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே அவர்கள் இந்த ஒரு மணிநேர போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்று நண்பகல் 12.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்று கூடிய யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலின் முன்பாக ஒன்று சேர்ந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தின்போது பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சி ற்கு எதிராகப் பல்வேறு சுலோக அட்டைகளைப் போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.


பல்கலைக்கழக ஆசிரியர் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாண், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரை வெளியேற்று, விரிவுரையாளர்கள் வீதியில் ஊழியர்களும் வீதியில், மாணவர்களும் வீதியில், பல்கலைக்கழகங்களோ இருட்டில், போதனை சாரா ஊழியர்களின் பிரதிநிதிகளுடனான உடன்பாட்டை அமுலாக்கு போனற சுலோகங்கள் இவற்றில் அடங்கியிருந்தது.

யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் இந்தப் போராட்டம் காரணமாக யாழ். பல்கலைக்கழகத்தின் முன்பாகப் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

போராட்டக்காரர்கள் சிறிது நேரம் கழித்து அங்கிருந்து நகர்ந்து பல்கலைக்கழக வளாகத்தில் கூட்டமொன்றை நடத்தி விட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர். இந்தப் போராட்டம் குறித்து யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அனைத்துப் பல்கலைக்கழக கூட்டுக்குழுவின் ஏற்பாட்டில் தாம இந்த ஒருமணி நேர கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருப்பதாகவும், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களது பிரச்சினை, மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்தில் கொண்டு மூன்று மாதங்களாகத் தொடரும் இத்தகைய பிரச்சினைகளைத் தீர்த்து அனைத்துப் பல்கலைக் கழகங்களின் முழுமையான செயற்பாட்டில் அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக கொண்டார். (பா,இ)

# மண்கும்பான் பள்ளிவாசல் கொடியேற்றம்




வேலணை சாட்டி வெள்ளக்கடற்கரை பிரதேசத்தில் உள்ள மண்கும்பான் ஜூம்மா பள்ளிவாசல் கொடியேற்ற நிகழ்வு நேற்று முன்தினம் மாலை ம.்.ரீப் தொழுகையின் பின்னர் யாழ். முஸ்லிம்களால் கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது.

சுமார் 22 வருடங்களின் பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர். 12 நாட்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ள நிகழ்வின் இறுதியாக கந்தூரி (அன்னதானம்) வழங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொடியேற்ற நிகழ்வுக்கு முன்னர் மௌலவி பலாஹிர் தலைமையில் துஆ பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டதுடன் தொழுகையும் நடைபெற்றது. இப்பள்ளிவாசல் ஹிஜ்ரீ 1386 தொடக்கம் கி.பி 1966 பிற்பட்ட காலப் பகுதியில் ஷெய்கு சுல்தான் அப்துல் காதீர் வொலீயுல்லாஹ் றழி அவர்களின் விஜயத்தின் பின்னர் அடக்கம் பெற்றமையினால் இது புனித தலமாகப் பேணப்படுகிறது.(105)

# அச்சுறுத்தலின் பின்னணியில் புலிகள்

## ஹெகலிய நம்புகிறார்



(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக தமிழகத்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் பின்னணியிலும் அச்சுறுத்தல் நடவடிக்கைகளின் பின்னணியிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்பட்டிருக்கலாம் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டில் இடம்பெற்று வரும் இலங்கை எதிர்ப்பு போராட்டங்களின் பின்னணியில் எஞ்சியுள்ள விடுதலைப் புலிகள் இயங்கியிருக்கக் கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்திய ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பயண எச்சரிக்கையை வாபஸ் பெற்றுக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### தொழில்நுட்ப...

இதன்மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவை மேம்படுத்தி அபிவிருத்தி செய்வதுடன், குறிப்பிட்ட செயற்றிட்டங்களை எதிர்காலத்தில் மென்மேலும் நவீன தொழில்நுட்பத்துடன் வளர்த்தெடுப்பது போன்ற விடயங்களிலும், கவனம் செலுத்தப் பட்டது.

அத்துடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான நிறுவனங்களினது உற்பத்திகளை தென்னாபிரிக்க நாட்டின் உற்பத்திகளுக்கு இணையாக உற்பத்தி செய்வதற்குத் தமது முழுமையான பங்களிப்பு வழங்கப்படுமென தென்னாபிரிக்க அரசுப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

தென்னாபிரிக்காவின் வியாபார அபிவிருத்திக் கூட்டமைப்பின் பங்கேற்றலுடன் நடைபெற்ற இந்த கலந்துரையாடலின் போது அந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் தலைமையிலான குழுவில் இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் மற்றும் ஏனைய வியாபார அரசதுறைசார்ந்த பிரமுகர்கள், வெளிநாட்டு அமைச்சின் பிரதிநிதிகள், வர்த்தகசம்மேளனப் பிரதிநிதிகள், கைத்தொழிற் பேட்டை சம்மேளனப் பிரதிநிதிகள் ஆகியோருடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் ஜெகராஜசிங்கம் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

### கிழக்கில்...

ஆணையாளர் அம்பாறை மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டார்.

அதேவேளை வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு ஆகிய மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் கடமைகளின் நிமித்தம் கொழும்பிலிருந்து நேற்று உத்தியோகத்தர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 35 ஆயிரம் உத்தியோகத்தர்களை இந்த தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தியுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த உத்தியோகத்தர்கள் இன்று முதல் தமக்குரிய வாக்குச் சாவடிகள் மற்றும் பணியிடங்களுக்கு சமூகமளிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.


### முற்றவெளியில்...

தெரிவித்தார். நீண்டதூரப் பயண தனியார் பேருந்துத் தரிப்பிடம் தற்போது இந்தப் பூங்கா அமைக்கப்பட்டுவரும் பகுதியில் காணப்படுவதால் இந்தப் பேருந்துத் தரிப்பிடம் வேறு இடத்திற்கு விரைவில் மாற்றப்படவுள்ளதாகத் தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் குறிப்பிட்டார்.

அத்துடன், மாற்றப்படவுள்ள நெடுந்தூர தனியார் பேருந்துத் தரிப்பிடத்திற்கான நில வாடகை மற்றும் பராமரிப்புக் கூலியாக மாதம் ஒன்றுக்கு 100,000 ரூபாவை யாழ்.மாநகரசபை தனியார் போக்குவரத்துச் சங்கத்திடம் கோரியது. இதன்போது, உயரதிகாரிகளுடன் கலந்தாலோசித்த பின்னர் இதற்கான பதிலை வழங்குவதாகத் தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புல்லுக்குளம், வண்ணைக்குளம், ஆரியகுளம், கன்னாதிட்டி குளம், தேவரிர் குளம் போன்றவற்றின் அபிவிருத்திப் பணிகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப் பட்டது.இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாநகரசபை முதல்வர், யாழ்.நகர இராணுவ அதிகாரி, கடற்படைப் பொறுப்பதிகாரி, பொலிஸ் அதிகாரிகள், அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத் தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சியின் ஆசிரியர் வளத்தை பூர்த்தி செய்ய முயற்சி செய்வோம்

(கிளிநொச்சி)

பாடசாலைகளுக்கான பௌதீக வளங்கள் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ள போதும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியர் வளத்தினைப் பூர்த்தி செய்வதற்காக நாம் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றோம் என கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். நேற்றுப் பரந்தனில் ஆசிரியர் வளமத்திய நிலையத்தினைத் திறந்துவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஆசிரியர்களின் திறமைகளை விருத்திசெய்யும் முகமாக ஆசிரியர் மத்திய நிலையங்கள் செயற்படுகின்றன. அதற்கமைவாக கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் பகுதியில் இவ் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அக்காரயன் பகுதியில் உள்ள மத்திய நிலையத்தினையும் திறப்பதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றார்.

இந்த மாவட்டத்தில் பாடசாலைகளுக்கான பௌதீக வளங்கள் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளபோதும், ஆசிரியர் வளத்தினைப் பூர்த்தி செய்வதற்காக நாம் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றோம். இந்நிலையில் கடந்த யூன் மாதம் 139ஆசிரியர்களை நாம் பெற்றுக்கொண்டோம். ஆனால் அவர்களில் 29 பேர் இதுவரை தொடர்பு கொள்ளவில்லை. இவ்வாறான சூழலில் தற்போது 44 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார்கள். எனவே ஆசிரியர் வளப் பங்கீடுகள் சமமாக அமைய வேண்டும் என்பதை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். ஆகவே தொடர்ந்து வரும் காலங்களில் எமது மாவட்டத்திற்கும் பூரணப்படுத்தப்பட்ட ஆசிரியர் வளம் கிடைக்கப்பெறுமென நாம் நம்புகின்றோம் என்றார்.

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் 30 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஆசிரியர் மத்திய நிலையத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் நேற்றுக் காலை 10.30 மணிக்குத் திறந்து வைத்தார்.

நிலைய முகாமையாளர் செந்தில்வடிவேலின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் இதயராஜன், கிளிநொச்சி பிராந்திய ஆணையாளர் பத்மநாதன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் விந்தன் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதியின் இந்திய விஜயம் உறுதி

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வது உறுதி என்று அவரது செய்தித் தொடர்பாளர் பந்துல ஜெயசேகர உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் காஞ்சி அருகே பாஜக தலைவர் சுஷ்மா ஸ்வராஜ் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்ச்சியில் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தமிழக அரசியல் கட்சிகள் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

ராஜபக்ஷவின் வருகையை எதிர்த்து காஞ்சியிலேயே கறுப்புக் கொடி போராட்டம் நடத்தப்படும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. அறிவித்திருக்கிறார்.

இந்நிலையில் இலங்கை ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் பந்துல குணசேகர,

ஜனாதிபதி இந்தியா செல்வது உறுதியானது. அவரது பயண திட்டத்தில் எந்த மாற்றமும் இல்லை என்றும் எந்த எதிர்ப்புக்கள் இருந்தாலும் மகிந்த ராஜபக்ஷ இந்தியா செல்வது உறுதி என்றும் கூறியுள்ளார்.

## ஐந்து மீனவர்கள் படுகாயம்

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் மீண்டும் நேற்று அதிகாலையும் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த தாக்குதலில் 5 க்கும் மேற்பட்ட மீனவர்கள் படுகாயமடைந்தனர்.

நாகப்பட்டினம் வேதாரண்யம் ஆறுகாட்டுத்துறையைச் சேர்ந்த மீனவர்கள் பலர் விசைப் படகுகளில் கோடியக்கரை கடற்பரப்பில் நேற்று முன்தினம் முதல் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அந்த தருணத்தில் அவர்களது படகுகளை வழிமறித்த கடற்படையினர் மீனவர்களை தாக்கி விரட்டியடித்துள்ளனர். அவர்களிடம் இருந்து தப்பிய தமிழக மீனவர்கள் கரை திரும்பியுள்ளனர்.

## மதுபான சாலைகளுக்கு பூட்டு

மாகாண சபைத் தேர்தல்களை முன்னிட்டு சப்பிரகமுவ, வடமத்தி, கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் நாளை சனிக்கிழமை மூடப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

# முத்தமிழ் விழாவும் சஞ்சிகை வெளியீடும்

யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட தேசியப் பாடசாலையின் முத்தமிழ் விழாவும், "கலைத்தளிர்" சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வும் இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் தமிழ் விரிவுரையாளர் ச.லலீசனும் கலந்துகொள்ளவுள்ளனர். (52)

# ஐக்கிய தேசியக் கட்சியில் அடிப்படை மாற்றங்கள்

(கொழும்பு)

கட்சியில் அடிப்படை மாற்றங்கள் செய்யப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் கட்சிப் பொதுக் கூட்டத்தில் இந்த மாற்றங்கள் அமுல்படுத்தப்படும் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 66 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

66 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடைபெற்ற பிரதான நிகழ்வு கட்சித் தலைமையகம் சிறிகொத்தவில் நடைபெற்றது. புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கட்சித் தலைமையகம் சிறிகொத்தவை ரணில் விக்ரமசிங்க உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

# தமிழக சம்பவங்கள் இரு நாட்டு உறவைப் பாதிக்காது

(கொழும்பு)

அண்மைக்காலமாக தமிழகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் இரு நாடுகளினதும் உறவுகளைப் பாதிக்காது என இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார்.

இலங்கை யாத்திரிகர்கள் மீது தமிழகத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களினால் மத்திய அரசாங்கத்துடன் நீடித்து வரும் உறவுகளில் விரிசல் ஏற்பட வாய்ப்பில்லை.

அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மத்திய அரசாங்கத்துடன் தொடர்ந்தும் உறவுகளைப் பேணுவோம்.

அண்மைய சம்பவங்களினால் மத்திய அரசாங்கத்துடனோ அல்லது இந்திய மக்களுடனோ பிரச்சினை ஏற்படுத்திக் கொள்ளப் போவதில்லை.

இந்தச் சம்பவங்களை இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் விரிசலை ஏற்படுத்த அனுமதிக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## அகதிகள் வருகையால் அவுஸ்ரேலியாவுக்கு செலவு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து அதிகளவான அகதிகள் அவுஸ்ரேலியாவின் கொக்கோஸ் தீவுக்கு செல்வதால், அங்கு அதிக நிர்வாக செலவுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வானூர்தி சேவைகளுக்கான செலவினங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

கொக்கோஸ்தீவுகளுக்கு 1000 இற்கும் அதிகமான அகதிகள் சென்றுள்ளனர்.

அவர்களை கிறிஸ்மஸ் தீவு மற்றும் ட்ராவின் முகாம் போன்றவற்றுக்கு மாற்றுவதற்கு வானூர்திகளே பயன்படுத்தப்படுகின்றன.

இதற்காக கடந்த ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 2.7 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## தமிழ் இளைஞரைக் கடத்திய இருவர் கை[illegible]

(கொழும்பு)

கொழும்பில் வைத்து தமிழ் இளைஞர் ஒருவரைக் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் இருவர் கொட்டாஞ்சேனையில் கைது செய்யப்பட்டுள்ளனர். கொட்டகலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டார்.

அந்த இளைஞரை வீடொன்றுக்குள் மறைத்து வைத்திருந்ததாகக் கூறப்படும் இருவரைக் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபர்கள் புசல்லாவைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இன்று கிருஷ்ண ஜெயந்தி

(பருத்தித்துறை)

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று கிருஷ்ண ஜெயந்தி இடம்பெறவுள்ளது.

இரவு 7.00 மணிக்கு பண்டிதர் பொன் சுகந்தனின் 'கிருஷ்ண லீலைகள்' என்ற பொருளில் சொற்பொழிவு இடம்பெறும்.

தொடர்ந்து வடக்கு வீதியில் உறியடி நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

# சித்தாத்திரை மாதா உற்சவம்




வேலணைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சாட்டி சித்தாததிரை மாதா ஆலய வருடாந்த உற்சவம் நேற்று மாலை நான்கு மணிக்கு தொடங்கியது. பிரார்த்தனையின் பின்னர் கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து செபமும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இறுதியில் திருச்சொரூப பவனி நடைபெற்றது. இத்திருவிழா தொடர்ந்து 10 தினங்களுக்கு நடைபெறும். வழிபாடுகளில் குடாநாட்டு

கிறிஸ்தவ சமயத்தவர்கள் ஒன்று கூடிவழிபாடு இயற்றுவர். மன்னாரில் உள்ள மடு ஆலயத்தை பெரிய மடு ஆலயம் என்றும் இதனைச் சின்னமடு ஆலயம் என்றும் அழைப்பது குறிப்பிடத்தக்கது.

1505 இல் போர்த்துக்கேயரின் இலங்கை வருகை மெல்ல மெல்ல வியாபித்து 1619 இல் யாழ்ப்பாணக் குடாவைப் பரந்தளவில் கைப்பற்றி அல்லைப்பிட்டித் தீவிலும் பாதுகாப்புத்தளம் அமைத்தனர். அப்பொழுது அவர்கள் ஒரு கூடாரம் அமைத்து தமது ஆன்மீகக் கடமைகளை செய்வதற்கு தமது கப்பலில் இருந்த தேவ அன்னையை கூடாரத்துள் நிலைநிறுத்தி வழிபட்டனர் என்பது ஆலய வரலாறாகும்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.